854

REGISTERED No. M. 6165. அணா 2

854 / 1732

பத்ஹுல் இஸ்லாம்

فتح الاسلام

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஜனவரி 1953.

விஷயம்	பக்கம்
நீ ஒருத்[illegible] தானா?	1
சட்டப்பிர[illegible]ம் கடந்த [illegible]	2
குல்இளவரசி அல்[illegible] இராஜகுமாரன் (பாலர் பகுதி)	3
நீ என்ன செய்திருப்பாய்?	11
உனது கடிகாரம்	13
பாலோவின் மர்மம் (தொடர் கதை)	19
தெருவில் புதையல் கிடைத்தது	28
ஆண்டவனுக்கு தக்குவாச் செய்	29
தக்காளி ஜாம் (மாதர் பகுதி)	30
பாத்திமா நாயகிக்குப் போதனை	,,
விகடத் துண்டுகள்	31

[illegible] இஸ்லாம் ஆபீஸ்:
[illegible]0, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதருஸ் 5.

JL
O7ɱ2V, M24FI
M53.
187016

பத்ஹுறுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனில்

	வருஷ சந்தா	ரூ. 1-8-0
	தனிப் பிரதி	அணா. 2
மற்ற வெளி நாடுகளில் வருஷ சந்தா		ரூ. 2-0-0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

மானேஜர்,

பத்ஹுறுல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

கைத்தொழில் சம்பாதனை வழிகள்.

சொற்ப பணத்தை வைத்துக் கொண்டு ஏதாவது ஒரு சிறு வியாபாரம் செய்யலாம் என்ற உத்தேசத்துடன் இருக்கும் ஆட்களுக்கு தேவைப்படும் நூற்றுக் கணக்கான விஷயங்களை இந்த புஸ்தகம் கொண்டுள்ளது. இந்தபுஸ்தகத்தில் உள்ள முக்கிய விஷயங்களுக்கு அட்டவணை அகராதி முறையில் 16 பக்கங்கள் கொண்டது சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்த புஸ்தகம் மாத்திரம் 224பக்கங்கள் கொண்டது. இதை பெதர்வைட் காகிதத்தில் அச்சிட்டு சேர்த்தியான கலிகோபைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ. 2 8 0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுறுல் ஹமீது & ஸன்ஸ்,

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

OFFICE ...
14 DEC 1952
MADRAS

பத்ஹுல் இஸ்லாம்

ஜனவரி—1953.

18796

நீ ஒருத்தன் தானு?

றஹ்மத் நாடகமேடையிலும் சினிமாவிலும் நடிக்கும் தொழிலில் ஈடுபட்டு நிறைய பணம் சம்பாதித்து வந்தான். ஆனால் தற்போது வேலையில்லாமல் திண்டாடுகிறான். எல்லா ஸ்டுடியோக் களிலும் போய் வேலை கிடைக்குமா என்று பார்த்தான். எங்கும் வேலை கிடைக்கவில்லை.

கடைசியாக றஹ்மத் ஒரு ஸர்கஸ் நடத்திவரும் ஒருவரிடம் சென்று ஏதாவது வேலைக்கிடைக்குமா என்று கேட்டான். முதலில் ஸர்கஸ் ஆசாமி வேலை ஒன்றும் இல்லை என்று சொல்லி அனுப்பி விட்டார். ஆனால் றஹ்மத் வெளியே வரும்போது அழைத்து, "ஒருவேலை இருக்கிறது. உனக்கு பிடித்தால் செய்யலாம். அதாவது இங்கு இருந்த ஒரு பெரிய குரங்கு இறந்துவிட்டது. குரங்கு வேஷம் தரித்து அதற்கு பதிலாக மாலை காட்சியிலும், இரவு காட்சியிலும் நடிக்க வேண்டும்" என்றார் ஸர்கஸ் ஆசாமி. கதாநாயகனை பல இடங்களில் நடித்த றஹ்மத்துக்கு குரங்கு வேஷம் தரித்து நடிப்பது ஒருவழியில் அவமானமாகவே தோன்றி யது. ஆனால் என்ன செய்வது. ஏதாவது ஒரு வேலை செய்து பிழைக்க வேண்டும். முன் தான்செய்த வேலையை நினைத்துக் கொண்டிருந்தால் பிழைப்பது எப்படி? அவமானமா யிருந்து விட்டுபோனால் போகுது. அந்த வேலையை செய்ய ஒத்துக் கொண்டான் றஹ்மத்.

குரங்குவேஷம் தரித்து நடித்த முதல் காட்சியின்போது றஹ்மத் தன்னுடைய வேலையை ஒழுங்காக செய்தான். கடைசியாக சிங்கங்கள் இருக்கும் கூண்டின் மேலே குறுக்காக போடப்பட்டி ருந்த ஒரு பலகையின்மேலே நடந்துபோகும்போது கீழே றஹ்மத் பார்த்தான். அங்கு சிங்கம் கர்ஜித்துக் கொண்டிருப்பதை பார்த் தான். றஹ்மத்துக்கு பயம் வந்துவிட்டது. பயத்தில் தடுமாறி சிங்கங்களுக்கு இடையில் விழுந்தான். அங்கு இருந்த சிங்கங் களுக்கு என்ன நடந்தது என தெரிவதற்குமுன் றஹ்மத் சத்தம் போட்டுக்கொண்டு அந்த கூண்டை சுற்றி யிருந்த அளிகளைப் பிடித்துக்கொண்டு மேலே ஏறினான். மேலே ஏறி அளிகளில்

தொத்திக்கொண்டு அவனுக்கு சற்று கீழே இருந்த ஒரு சிங்கத்தின் வாயைப் பார்த்தான். அப்போது அந்த சிங்கம் நஹ்மத்தைப் பார்த்து, "அட முட்டாள் பதறுதே; நீ ஒரு கடிகன்தான். வேலையில்லாமல் இந்த வேலை செய்கிறதாக நினைக்காதே" என்றது.

சட்டப்பிரகாரம் நடந்ததற்கு வெகுமானம்

அமீர் ஒரு குடியானவன். அவனுக்கு சொந்தமான நிலங்கள் சில இருந்தன. அதில் பயிர்செய்து காலத்தை தள்ளிவந்தான். அமீருக்கு சொந்தமான ஒரு சிறு வீடும், அதனை அடுத்த ஒரு மாட்டு கொட்டையும் உண்டு.

இருவர் அவனிடம் அணுகி அவனுடைய மாட்டுக் கொட்டையை ஒருநாளைக்கு மதுபானங்கள் வைக்க குடிக்கூலிக்காக கேட்டார்கள். இன்னும் அவர்கள் அமீரை இது விஷயமாக யாரிடமும் சொல்லக்கூடாது என்று சொல்லியிருந்தார்கள். மாட்டுக் கொட்டையை ஒருநாளைக்கு உபயோகிக்க ரூபாய் நூறு தருவதாக சொன்னார்கள். அமீர் அதற்கு சம்மதித்துக் கொண்டான். எந்த தினத்தன்று அவர்களுக்கு தனது கொட்டை தேவையென்று அவர்களிடமிருந்து கேட்டு தெரிந்து கொண்டான்.

போலீஸார் வசம் அமீர்சென்று விஷயத்தை சொன்னான். போலீஸார் கையுமெய்யுமாக மதுபானங்களை கொண்டுவருபவர்களை பிடிப்பதற்காக எத்தனம் செய்து, எவ்வாறும் அவைகளை கொண்டு வருபவர்களை தப்பவிடாதபடி, நிறைய ஆட்களுடன் அமீரின் மாட்டுக் கொட்டயைச் சுற்றி ஒளித்திருந்தனர். அவர்கள் மதுபானங்களை கொண்டுவருவதாக சொன்ன நாள் முழுவதும் காத்துக் கொண்டிருந்தும் யாரும் அங்கு எவ்வித பொருளையும் கொண்டு வந்து வைக்கவில்லை. காத்துக் கொண்டிருந்து சலித்துப் போய் போலீஸார் மாட்டுக் கொட்டையை விட்டு வெளியேறினர்கள்.

இரண்டு தினத்திற்கு பிறகு முன்வந்த இருவர்களும் அமீரின் வீட்டுக்கு வந்து அவனுக்கு ரூபாய் நூறு கொடுத்தார்கள்.

அமீர்: நீங்கள் எனது கொட்டையை அன்று உபயோகிக்கவில்லையே. எதற்கு பணம் கொண்டுவந்து கொடுக்கிறீர்கள்?

"அன்றுபோலீஸார் யாவரையும் நீங்கள் உங்கள் கொட்டகையைச் சுற்றிவைத்துக் கொண்டிருந்ததால், போலீஸார் தொந்தரவு இல்லாமல் எங்களால் மதுபானங்கள் கொண்டு போக எவ்வளவோ சௌகரியமாக இருந்தது" என்றார்கள்,

600 002.

பாலர் பகுதி.

குல் இளவரசி அல்லது பரிகளின் இராஜகுமாரன்.

(2-வது பாகம்.)

வேலையாட்கள் குல்இளவரசியை இழுத்துக் கொண்டு போகும் பொழுது "பரிகளின் ராஜகுரானின் குதிரையினால் வந்த தொல்லையல்லவா இது. அதனால் நான் இப்பொழுது படப் போகும் பாடு அவருக்கு எவ்வாறு தெரியும்" என்று நினைத்து துக்கித்தாள். மாளிகையின் பின்புறம் இவளை கொண்டு போய் பிரம் பினால் வேலைக்காரிகள் ஓங்கி ஓங்கி அடித்தார்கள். ஆனால்ஒவ்வொரு அடியும் குல் இளவரசிக்கு மயில் இரகினால் தடவி விடுவது போல் யிருந்தது. ஆச்சரியப்பட்டு திரும்பி வேலைக்காரிகளின் கைகளை நோக்கினாள். வேலைக்காரிகளின் கைகளில் மயிலின் இறகே அவள் கண்களுக்கு தோன்றியது. வேலைக்காரிகள் அடிமேல் அடியடித்து கைகள் சோர்ந்தன. இவ்வாறடிபடும் தருணத்தில், குல்இளவரசி கண்களுக்கு, தன்முன் பரிகளின் ராஜகுமாரன் நிற்பது தெரிய வந்தது. அந்த பரிகளின் ராஜகுமாரன் அவளை கண்களை மூடிக் கொண்டு படுத்துக் கொள்ளுமாறு சைகை செய்தான். அவளும் கீழே படுத்துக்கொண்டாள். அடிபொறுக்காமல் கீழே மூர்ச் சித்து விழுந்து விட்டதாக வேலைக்காரிகள் எண்ணி அவளை தூக்கி, அவள் அறையினுள் கட்டிலின் மேல் போட்டு விட்டு சென்றார்கள்.

அவர்கள் சென்றதும் அறைக்குள் பரிகளின் ராஜகுமாரன் வந்தான். அவனைப்பார்த்ததும் "நீங்கள்வராவிட்டால் பிரம்பு அடி யால் இதற்குள் இறந்திருப்பேன். அதிருக்கட்டும். பிரம்பு எவ்வாறு மயில் இறகாக மாறியது?" என்றாள் குல்இளவரசி. அதற்கு ராஜகுமாரன் "உனதுகஷ்டத்தில் என்னை நினைத்தாய்

உன் கஷ்டத்தை நிவர்த்தி செய்தேன். இனி நான் போய் வருகிறேன்'' என்று சொல்லி மறைந்து விட்டான்.

சில நாட்களுக்குப்பின் பல் இளவரசி, குதிரையிலிருந்து கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயங்களெல்லாம் சொஸ்தமாகி பூர்ண சௌக்கிய மடைந்ததால், அரசன் சந்தோஷமாகி, ஏழு நாட்களுக்கு சந்தோஷம் கொண்டாடவேண்டு மென்றும் ஒரு பெரிய மைதானத்தில் விதவிதமான கேளிக்கைகளும் ஆட்டங்களும் நடத்தப்படு மென்றும் தனது பிரஜை களுக்கெல்லாம் ஊர் முழுவதும் தெரிவித்தான். இந்நாட்களில், கைவித்தை சிலம்பு வித்தை இவைகளில் தேர்ந்தவர்கள் வந்து, தங்கள் தங்கள் வித்தைகளை காட்டினால், ராணியாகிய பல்இளவரசி வெகுமதியளிப்பாளென்றும் தெரிவித்தான். அவ்வாறே சந்தோஷமாக 5 நாட்கள் கழிந்தன.

வேடிக்கையின் 6-வது நாள் குதிரை ஓட்டப்பந்தயம் ஒன்று ஏற்பட்டிருந்தது. அதில் அநேக குதிரை வீரர்கள் தத்தம் குதிரைகளுடன் வந்து ஷை பந்தயத்திற்கு தயாராயினர். பல்இளவரசியினிடம் மிக வேகமாக ஓடக்கூடியதொரு குதிரையிருந்தது. அதையும் தன்னுடைய குதிரைக்காரனிடம் சொல்லி, ஷை பந்தயத்தில் ஓடுமாறு ஏற்பாடு செய்திருந்தாள். ஜனங்களெல்லாம் பல் இளவரசியின் குதிரையின் பார்வையையும் தேஜஸையும் பார்த்ததும், அதை வெல்ல அந்த ஊரிலேயே வேறு குதிரையில்லையென்று தீர்மானித்து விட்டார்கள்.

இக்குதிரை பந்தயம் துவக்கமாக கொஞ்சம் நேரம் தான் இருந்தது. அச்சமயம் ஒரு அழகியவாலிபன் ஒரு சிகப்பு குதிரையின் மேல் சவாராகி வந்து, தானும் பந்தயத்தில் கலப்பதாக சேர்ந்து கொண்டான். குதிரைப்பந்தயம் துவக்கமானதும், ஜனங்கள் எதிர்ப்பார்த்தவாறே பல்இளவரசியின் குதிரை எல்லா குதிரைகளுக்கும் முன்பு ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் கொஞ்ச நேரம் ஆக ஆக சிகப்பு குதிரை பல்இளவரசியின் குதிரைக்கு அருகே வர ஆரம்பித்தது. கொஞ்சநோத்திற்குள் முந்தவும் ஆரம்பித்தது. முந்தியபின் இன்னும் வேகமாக கடைசிவரை ஓடி பந்தயத்தில் முதல் குதிரையாக ஜெயித்தது. ஜெயித்தபின் வெகுமானத்திற்காக ஷைவாலிபன் பல் இளவரசிமுன் நின்றான்.

பல் இளவரசி அவனை நோக்கி "நீயார்? நீசவார் செய்த குதிரை யாருடையது?" என்று கேட்டாள். அதற்கு அந்த வாலிபன் தான் குல்இளவரசியின் வேலைக்காரன் என்றும், அந்த குதிரை குல்இளவரசியினுடைய தென்றும் தெரிவித்தான். இதைக் கேட்டதும் பல் இளவரசி கோபத்துடன் "குல் இளவரசி யாரு

டைய உத்திரவின் பேரில் தன்னுடைய குதிரையை பந்தயத்தில் விட்டாள்? என்றாள். எல்லா ஜனங்களும் பந்தயத்திற்கு தத்தம் குதிரை ஓடவிட்டது போல் அவளும் தன்குதிரையை பந்தயத்தில் விட்டாள் என்பதாக வாலிபன் பதில் கூறினன். பல்இளவரசிக்கு குல்இளவரசியின் பேரில், முன்பேயிருந்துவந்த பொறாமையும்கோபமும் அதிகரித்தது. அங்கேயே குல்இளவரசியை ஏசி, ஏதாவது தண்டனை செய்வது ஊர் ஜனங்களின் முன்சரியல்ல வென்றெண்ணி அந்த வாலிபனிடம் தன்னுடைய உத்திரவன்றி குல்இளவரசியின் குதிரையை பந்தயத்தில் ஓடவிட்டதால், வெகுமானம் ஒன்றும் கொடுக்க முடியாதென்று கோபமாய் சொல்லிவிட்டாள். ஜனங்களெல்லாம் பல் இளவரசியின் அநீதியைப்பார்த்து, மனம் வெகுண்டு வீடுதிரும்பினர். குல்இளவரசி அந்தவாலிபன் முகஜாடையைப் பார்த்து, அவன் பரிகளின் ராஜகுமாரன் என்று அறிந்தாள்.

கடைசியான ஏழாவது நாள் பயில்வான்களின் குஸ்திநடைபெற ஏற்பாடாயிருந்தது. அநேக பயில்வான்கள் மைதானத்தில் வந்தார்கள். வந்தவர்களில் திடகாத்திர முள்ள மிக பல சாலியான பயில்வானை பல்இளவரசி தேர்ந்தெடுத்து, அவனை தன்னுடைய பயில்வானாக தெரியப்படுத்தினள். குஸ்தியில் பல்இளவரசியின் பயில்வான் மற்ற எல்லா பயில்வான்களையும் ஒவ்வொருவனாக தோற்கடித்து விட்டான். பின்பு மைதானத்தில் நின்று சவால்கூறி, ஜனங்களில் யார் வேண்டுமானாலும் தன்னுடன் குஸ்திபோட்டு பார்க்கலாமென்று சப்தமிட்டான்.

அச்சமயத்தில் ஜனங்கூட்டத்திலிருந்து ஒரு வாலிபன் குஸ்தி செய்ய தயார் என்று முன்வந்தான். அவனைக்கண்டதும் ஜனங்களெல்லாம் சிறிக்க ஆரம்பித்தார்கள். ஏனெனில இவ்வாலிபனைக் கண்டால், அவனை பயில்வான் என்று கூற கூட அருகதையுள்ளவனல்ல. பல்இளவரசியின் பயில்வான் வாயால் ஊதினால் இவ்வாலிபன் பறந்து விடுவான் போல் தோன்றியது.

ஆனல் இருவருக்கும் குஸ்திநடந்ததும், அவ்வாலிபன் என்ன வித்தை கையாண்டான் என்று ஜனங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. பயில்வான் ஒரு குதிகுதித்து கீழே விழுந்தான். வாலிபன் பயில்வானுக்கு மேலிருந்து வெற்றிபெற்றான் இதைக்கண்ணுற்ற ஜனங்களெல்லாம் சந்தோஷத்தால் கைதட்டி கரகோஷம் செய்தனர்.

பின் பல் இளவரசியின்முன் அவ்வாலிபன் போய் வெகுமானத்திற்காக நின்றதும், அவள் "நீ யார்?" என்று கேட்டாள். அதற்கவன், தான் குல் இளவரசியின் பயில்வான் என்பதாகத் தெரிவித்

தான். உடனே பல் இளவரசிக்கு கோபம் வந்து, முந்தியநாள் செய்தது போல் அவ்வாலிபனுக்கு வெகுமானமளிக்காமல், தனது பயில்வானுக்கே அளித்தாள்.

பல் இளவரசி தனது மாளிகைக்கு வந்ததும் ராஜனிடம் "பார்த்தீர்களா! உமது மகள் என்னை இரண்டு தினங்களாக ஜனங்களின் முன் அவமானப்படுத்தினுள்" என்ருள் "நீதாய், அவள் மகள், உங்கள் இருவரின் தர்க்கத்தில்நான் தலையிடமாட்டேன்" என்ருன் அரசன். "அப்படியாகில் நான் அவளுக்கு ஒருசிறிய தண்டனை விதிக்கட்டுமா?" என்று பல் இளவரசி கேட்டாள். "அன்று அவளுக்கு பிரம்புஅடி தண்டனை கொடுத்தாயே! அப்பொழுது நான் உன்பேரில் கோபித்துக் கொண்டேனு?" என்ருன் அரசன். அதற்கு பல்இளவரசி "அன்றுதண்டனை கொடுத்தபின் அவளுக்கு புத்திவந்து, நல்லவிதமாக ஆகிவிட்டாள் என்று நினைத்தேன். தற்போது பார்த்தால், அந்த தண்டனை போதாது போல் தோன்றுகிறது" என்ருள். "உன் இஷ்டப்படியே செய். நீ செய்வதெல்லாம் அவளுடைய நன்மைக்காக செய்கின்ருய்" என்று சொல்லி அரசன் தன் அறைக்கு போய்விட்டான்.

அன்று சாயங்காலமானதும் தனது கோச்வண்டியை தயாராக வைக்குமாறு பல் இளவரசி உத்தரவு செய்தாள். அதன்படி கோச்வண்டி மாளிகைக்கு முன் வந்து நின்றதும், குல் இளவரசியைக் கூப்பிட்டு வண்டியில் ஏறச்செய்து, தானும் ஏறிக்கொண்டு காட்டுப் பக்கமாக ஓட்டிப் போகுமாறு வண்டிக்காரனுக்கு உத்தரவு செய்தாள். வண்டி காடுபோய் சேருவதற்குள் சூரியன் மேற்கு திசையில் அடைந்து எங்கும் இருள் சூழ்ந்தது. அப்பொழுது அக்காட்டினுள் குல் இளவரசியை வண்டியைவிட் டிறக்கிவிட்டு, வண்டியை திருப்பி தான் மாத்திரம் மாளிகை வந்து சேர்ந்தாள்.

குல் இளவரசிக்கு காட்டில் இருட்டில் என்னசெய்வதென்று தோன்ருமல் அங்கே ஒரு மரத்தடியில் அழுதுகொண்டு "ஆண்டவனே! நீ தான் துணை" என்று சொல்லி உட்கார்ந்தாள். கொஞ்ச நேரமானதும் காட்டு மிருகங்களின் சப்தங்கள் கேட்க பயந்து நடு நடுங்கி ஒரு மரத்தைச் சேர்த்து கட்டிக்கொண்டு முகத்தை மூடிக் கொண்டாள். கொஞ்ச நேரத்தில் எப்படியும் தன்னை துஷ்ட மிருகங்கள் வந்து கொன்று விடுமென்று தீர்மானித்தாள். இச்சமயத்தில் பரிகளின் ராஜகுமாரன் வந்தால், தன்னை காப்பாற்றக் கூடுமென்றும் நினைத்தாள்.

குல் இளவரசி சிறிது நேரம் சென்றபின், தனது கண்களை திறந்து பார்த்தாள். இருட்டாக இருந்த காடுவெளிச்சமாகத் தோன்

றியது. ஒவ்வொரு மரத்திலும் ஒவ்வொரு விளக்கு மாட்டப்பட்டு பிரகாசமான ஒளிவீசிக் கொண்டிருந்தது. இதற்குமுன் சப்தித்துக் கொண்டிருந்த மிருகஜாதிகளின் சப்தத்திற்குப் பகரம், இனிமை யான வாத்தியசப்தம் கேட்டது குல் இளவரசி, பயம்நீங்கி காட்டில் கொஞ்சதூரம் நடந்து பார்க்கையில் தனக்கு எதிராக பரிகளின் ராஜ குமாரன் தென்பட்டான். அவனைப்பார்த்ததும் சந்தோஷமாகி "நீங் கள் எவ்வாறு இக்காட்டினுள் வந்தீர்கள்? இந்த விளக்குகளெல்லாம் எப்படி வந்தன?" என்று குல் இளவரசி கேட்டாள். அதற்கு அவன் "நீ என்னை நினைத்தாய்; நான் வந்தேன். நீ இந்த காட்டி னுள் இருப்பதை யறிந்த பரிகளெல்லாம், சந்தோஷத்தால், மரங் களிலெல்லாம் விளக்குகளை தொங்க விட்டிருக்கிறார்கள்" என்று சொன்னதுடன் "உனக்கு இஷ்டமானால் இந்த அடியான் வீட்டுக்கு உன்னை அழைத்துச் செல்கிறேன்" என்று கேட்டான். "நல்லது வருகிறேன் உங்கள்வீடு அருகாமையிலா உண்டு?" என்று கேட்டாள் குல் இளவரசி. "ஆம் கொஞ்ச தூரத்தில் தான் உண்டு" என்று சொல்லி அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்றான். கொஞ்ச தூரம் நடந்து சென்றதும், ஒரு கண்ணாடியால் கட்டப்பட்ட ஓர் அழகிய மாளிகை தென்பட்டது. அந்த மாளிகையினின்றும் அநேக அழகிய நிறங்கள் கொண்ட வெளிச்சம் வீசிக் கொண்டிருந்தது. அந்த அழகிய மாளிகையின் வாயற்படியில் ஒரு வயதுமுதிர்ந்த கிழவி விலையுயர்ந்த உடுப்புக ளணிந்து கொண்டவளாக, நின்று கொண்டிருந்தாள். இவர்களைப் பார்த்ததும் அந்தக்கிழவி ஓடிவந்து குல் இளவரசியை சந்தோஷத்தால் சேர்த்து கட்டிக்கொண்டு மார் போடு மார்பணைத்து தழுவினாள். முகமலர்ச்சியுடன் "எனது அரு மையான குல் இளவரசியே! நான் இந்த ராஜகுமாரனின் தாயார். எனது மகன் இரவும் பகலும் உனது நினைவாகவே, உன்னைப் பற் றியே புகழ்ந்து கொண்டிருக்கிறான். உங்களிருவருக்கும் சிறப்பாக கலியாணம் செய்துவைத்து பார்த்து நான் மகிழும் தினம் என் றைக்கு ஆண்டவன் வைத்திருக் கிறானோ!" என்று சொன்னாள். குல் இளவரசி அதைக்கேட்டதும் வெட்கமடைந்து நாணி தலை குனிந்து கொண்டாள்.

பின் மூவரும் மஹாலுக்குள் சென்று ஒரு பெரிய அழகிய அறையினுள் உட்கார்ந்தார்கள். அக்கிழவி சாப்பாடுவைக்கு மாறு உத்திரவு செய்தாள். உடனே 20, 30 அழகிய வாலிப பெண்கள் பொன் வெள்ளி தட்டுகளில் விதவிதமான தின்பண்டங்கள் கொண்டு வந்து இவர்களின் முன்புவைத்தார்கள். மூவரும் மனத் திருப்தியாக சாப்பிட்டார்கள். பின்பு அக்கிழவி குல்இளவரசிக்கு அக்கண்ணாடி மாளிகை பூராவும் சுற்றிக் காண்பித்தாள். அம் மாளிகையிலுள்ள விசித்திரமான சாமான்களைக் கண்ணுற்ற குல்

இளவரசி பார்த்து மிக ஆச்சரியப்பட்டாள். இவ்வாறு சந்தோஷமாக மாளிகையை சுற்றிப்பார்த்துக்கொண்டே இரவு கழிந்தது. பொழுது விடிவதற்குள் தன் மளிகைக்கு போகவேண்டு மென்று குல் இளவரசி கேட்டுக்கொண்டதின் பேரில், ஓர் அழகிய ரதத்தில் அவளை ஏற்றிக்கொண்டு புறப்பட்டான் பரிகளின் ராஜகுமாரன். ரதம் கொஞ்ச தூரம் தரையில் ஓடியபின், ஆகாயத்தில் பறந்து சென்றது. கொஞ்சநேரம் பறந்தபின் கீழே இறங்கி, குல் இளவரசியின் மாளிகையின் முன் நின்றது. இளவரசி ரதத்தைவிட்டு கீழிறங்கினதும், "நான் போய் வருகிறேன். உனக்கு எப்பொழுது கஷ்டம் நேரிட்டாலும் என்னை நினைக்கத்தயங்காதே" என்று சொல்லி ரதத்தை ஓட்டிக் கொண்டு மறைந்தான் பரிகளின் ராஜகுமாரன். அவள் தன் அறைக்கு போய் படுத்துக்கொண்டாள்.

பல் இளவரசி, 'குல் இளவரசி இதற்குள் காட்டுமிருகங்களுக்கு இரையாகியிருப்பாள்' என்று மனதில் எண்ணி, சந்தோஷமாக தூங்கி காலையில் எழுந்தாள். குல்இளவரசி அவள்வழமைபடி தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு பிரமித்து விட்டாள். வேலைக்காரர்களைக் கூப்பிட்டு, குல் இளவரசி எப்பொழுது மாளிகைக்கு வந்தா ளென்று கேட்டாள். எல்லோரும் தெரியாதென்று சொல்லி விட்டார்கள்.

பல் இளவரசி, குல் இளவரசியை கோபத்துடன் எழுப்பி "ஆஹா! இன்னுமா தூங்குகின்றாய்? வேலை ஒன்றும் கிடையாதா! நான் இதுவரை உன்னைப்போல் தூங்கு மூஞ்சியைப் பார்த்ததில்லை எழுந்திரு" என்று சிடுசிடுவென்று பேசி எழுப்பி உட்காரவைத்து விட்டு சென்றாள். அதிலிருந்து தினசரி குல் இளவரசியை திட்டுவதும் ஏசுவதுமாகவே யிருந்தாள்.

ஒரு நாள் பல் இளவரசி, தனக்கு பிரியமான தாதி ஒருவளை கூப்பிட்டு, "குல் இளவரசிக்கு ஏதாவது ஒரு கடினமான வேலை கொடுக்கவேண்டும். அவள் அதை செய்ய முடியாதென்று சொன்னதும் சரியான தண்டனை கொடுப்பேன். அப்பேர்பட்ட கஷ்டமான வேலை ஒன்று சொல் பார்க்கலாம்" என்றாள். அந்த தாதி கொஞ்சநேரம் யோசித்தபின், "ஒரு அறையில் சிறுசிறு துண்டு காகிதங்களாக, கலர்காகிதமும் வெள்ளைக் காகிதமும் கலந்து நிரப்பி விடவேண்டும். அவைகளை வெள்ளை வேறு, கலர் வேறு என்று தனிதனியாக பிரிக்க ஒரு ஆளால் சுமார் ஒருமாதகாலம் பிடிக்கும். அவ்வாறான வேலையை குல் இளவரசியிடம் கொடுத்து ஒருநாளில் முடிக்கவேண்டுமென்று சொன்னால், அவளால் ஒருநாளில் செய்து முடிக்கவே முடியாது. உடனே உங்கள் இஷ்டப்படி அவளை தண்டிக்கலாம்" என்றாள். இந்த யோசனையைக் கேட்டு பல்

இளவரசி மிகசந்தோஷமானுள் ஒரு அறையினுள் தாதி சொல்லியபடி சிறுசிறு துண்டுகளாக கலர்காகிதமும், வெள்ளைக் காகிதமும் குவியச் செய்தாள்.

மறுநாள் காலை குல்இளவரசியைக் கூப்பிட்டு, "பெண்ணே! நீ ஒன்றும் வேலை செய்யாமல்நாட்களைப் போக்குகின்றாய். இன்றைக்கு அந்த அறையினுள் இருக்கும் காகிதங்களுள், வெள்ளை வேறு, கலர்வேருக பிரித்து இன்று சாயங்காலத்திற்குள் தனிதனியாக வைக்கவேண்டியது. இன்றைக்குள் இவ்வேலை முடியாவிட்டால் என் கோபத்திற்காளாவாய்." என்று ஆக்ஞாபித்து அவளை அந்த அறையினுள் அனுப்பி, வெளியில் பூட்டிவிட்டாள்.

குல் இளவரசி, அந்தக் காகிதக் குவியல்களைபார்த்து, எவ்வாறு இவ்வேலையை முடிக்கிறதென்று அறியாமல், விசனப்பட்டுக் கொண்டே, காகிதங்களை பிறிக்க ஆரம்பித்தாள். மத்தியானம்வரை சுறுசுறுப்பாக வேலைசெய்தும், ஒரு கூடை நிறைய காகிதம்தான் பிறிக்க முடிந்தது. அன்றைக்குள் அவ்வேலை தன்னல் செய்யமுடியாதென்றும், பல் இளவரசி அன்று சாயுங்காலம் வந்து, வேலை முடியாததைப் பார்த்து கடும் தண்டனை கொடுப்பாள் என்றும் தீர்மானித்தாள். தான் தற்போது படும் கஷ்டம் பரிகளின் ராஜகுமாரனுக்கு எவ்வாறு தெரியப்போகிற தென்று நினைத்தாள். அச்சனமே அவள் முன்பு ராஜகுமாரன் நிற்பதைக்கண்டாள். உடனே தன் கஷ்டத்தை மறந்து முகமலர்ச்சியுடன் "நீங்கள் எப்படி வந்தீர்கள்? அறை பூட்டப்பட்டிருக்கிறதே" என்றுள் குல் இளவரசி. அதற்கு பரிகளின் ராஜகுமாரன் "நீ என்னை நினைத்தாய். நான் வந்தேன். தற்போது நான் என்ன செய்யவேண்டிய தென்று சொல்லும்" என்றுன். குல் இளவரசி காகிதக் குவியலைக் காண்பித்து, வெள்ளை துண்டுகள்வேறு, கலர் துண்டுகள்வேருக பிறிக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டாள். அவன் சிறித்துக்கொண்டே, "உன் கண்களை கொஞ்சம் நேரம் மூடும்" என்றுன். குல் இளவரசி கண்களை மூடி, கொஞ்சநேரம் சென்றதும் திறந்து பார்க்க, ஒரு மூலையில் வெள்ளைகாகித துண்டுகளும், இன்னொரு மூலையில் கலர்காகிததுண்டுகளாகவும் பிறித்திருக்கக் கண்டு ஆச்சரியப்பட்டாள். ஆனல் பரிகளின் ராஜகுமாரனும் மறைந்துவிட்டான்.

அன்று சாயுங்காலம் பல் இளவரசி பூட்டைதிறந்து அறையினுள் பார்க்க, தான் ஏவியபடி காகிதங்களெல்லாம் பிரித்திருக்கக் கண்டு, ஆச்சரியமுற்று, குல்இளவரசியினிடம் என்ன சொல்வதென்று தெரியாமல், திரும்பிதன் அறைக்கு வந்தாள். தனக்கு முன் யோசனை சொன்ன தாதியைக் கூப்பிட்டாள். அவள் வந்த

தும், வாயில் வந்தவாறு திட்டி ஏசி, "உன் யோசனையைக் கேட்பவர்கள் முகத்தில் கரியைப் பூசிக்கொள்ளவேண்டியதுதான். ஏதோ பெரிய வேலை ஒரு மாதமாகும், என்று சொன்னதை சாதரணமாய் இதற்குள் குல் இளவரசி செய்து முடித்திருக்கிருள். நான் இன்றைக்கே சரியான தண்டனை கொடுக்கலாமென்று நினைத்து ஏமாந்தேன்" என்ருள்.

அதற்கு அந்ததாதி "நீங்கள் ஒரு வேலையை ஏவி, அதை செய்யாவிடில் தான் தண்டனை கொடுக்கவேண்டுமா? அவளை இப்பொழுதே கூப்பிட்டு போய் நமது பின் தோட்டத்திலுள்ள பெரிய பாதாள கிணற்றில் தள்ளிவிட்டால், அதிலுள்ள பெரிய பாம்புகள் அவளைசரி செய்து விடும்" என்று யோசனை கூறினள். இந்த யோசனையைக் கேட்டதும், சந்தோஷத்துடன் நல்ல யோசனை யென்று அவளைத்தட்டிக் கொடுத்து, அவ்வாறே செய்வதென்று தீர்மானித்தாள்.

மறு நாள் குல்இளவரசியை பல் இளவரசி பின்புறத்தோட்டத்திற்கு கூப்பிட்டுப்போய், ஏதோ வேடிக்கை காண்பிப்பது போல், அங்குள்ள பெரிய பாதாளக் கிணற்றில் தள்ளி விட்டாள். குல் இளவரசி, எதிர்ப்பாரத விதமாக கிணற்றினுள் தள்ளப்பட்டதும், "ஆண்டவனே! நீயே துணை" என்று கண்ணை மூடிக்கொண்டாள். ஆனல் அவளுக்கு ஏதோ தரையின் பேரில் நிற்பதாக தோன்றியது. கண்ணைத்திறந்து பார்த்தாள். கிணற்றின் தண்ணீரையும் காணவில்லை! பாம்புகளையும் காணவில்லை. தனக்கும் யாதொரு காயமு மேற்படவில்லை. தான் நிற்பது ஒரு மைதானத்தில் போல் தோன்றியது. அங்கு ஒரு பக்கத்தில் ஒரு வாயற்படிபோல் தோன்றிற்று. கதவு மூடப்பட்டிருந்தது. ஆண்டவனை மனதில் எண்ணி, அக்கதவை திறந்து வாயலைக் கடந்து பார்க்க, அங்கு அழகான ஒரு பூங்காவனம் தோன்றியது. அப்பூங்காவனத்தில் தனக்கு எதிரில் பரிகளின் ராஜகுமாரனும் அவன் தாயாராகிய கிழவியும் வருவதைப் பார்த்தாள். மூவரும் வெகு பிரியத்துடனும் சந்தோஷத்துடனும் சேர்ந்தார்கள்.

அப்பொழுது அக்கிழவி "எனது பிரியமுள்ள குல் இளவரசியே! நீ எவ்வளவு காலைக்கு அக்கொடூரப்பாவியாகிய பல் இளவரசியினிடமிருந்து கஷ்டப்படலா மென்றெண்ணியிருக்கிருய்? எங்களுடன் வந்து சுகமாக வாழ்ந்திருக்க உனக்கு இஷ்டமில்லையா? எனது மகன் உன்பேரில் அவ்வளவு ஆசையுடைய வனயிருக்க, உனக்கு அவன் பேரில் இஷ்டமில்லையா? நீ பிரியப்பட்டு, ஒத்துக் கொண்டால், இப்பொழுதே நமது மாளிகைக்குப் போய், உங்கள் இருவரின் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்"

என்று அன்புடன் கேட்டாள். குல் இளவரசி குதூகலத்துடன் கிழவி சொல்வதைக் கேட்டு சம்மதித்ததுடன் அவர்களுடனே அவர்களின் கண்ணுடி மாளிகைக்குப் போனுள். அங்கு இரு வருக்கும் கலியாணம் மிக சிறப்பாக முடிந்தது. அங்கேயே இரு வரும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள்.

சில வருடங்களுக்குப்பின் குல் இளவரசியின் தகப்பனுர் இறந்து விட்டாரென்பதை இருவரும் கேள்விப் பட்டு, அவ்வூரைப் பிடித்து, இருவரும் நீதி தவராமல் அரசு செலுத்தி வந்தார்கள். பல் இளவரசிக்கு தண்டனை யாதும் கொடுக்காமல் மன்னித்து விட்டாள் நமது குல் இளவரசி. கடவுளை நம்பினேர் கைவிடப்படார்.

நீ என்ன செய்திருப்பாய்?

ஒருநாள் நான் எனது நண்பனை பார்க்க அவனது வீட்டிற்கு சென்றேன். வீட்டிற்கு முன் இருந்த ஒரு மரத்தின் நிழலில் எனது காரை நிறுத்தி விட்டு இறங்கும் போது அந்த மரத்தில் கட்டியிருந்த ஒரு நாய் என்மேல் பாய வந்தது. ஆனுல் தப்பித்துக் கொண்டேன்.

வீட்டில் யாரும் இல்லாததால் நான் திரும்பிவர காரில் ஏறலாம் என சென்ருல் கட்டியிருந்த நாய் என்னை காரில் ஏற விடவில்லை. நாய் கட்டப்பட்டிருந்த சங்கிலி மிக பெரிதாக இருந்ததால் நான் எந்தபுரம் போய் ஏற முயன்ருலும் நாய் தொந்தரவு செய்தது.

ஆனுல் நாய் என்னை தொடாமல் காரில் ஏறி வந்தேன். எவ்வாறு செய்திருப்பேன என்று யோசிக்க முடியுமா?

(விடை பிப்ரவரி பிரதியில் போடப்படும்)

டிசம்பர் கேள்விக்கு பதில்: நான் குதிரையின் இரு கண்களையும் இரு கைகளால் நன்ருக மூடிக்கொண்டேன். குதிரை எங்கு ஓடுகிறது என்பதை அறியாததால் உடனே நின்றுவிட்டது.

அன்வாருல் குர்ஆன்

என்னும்

திருமறை பிரகாசம்

1–வது ஒளி

(குர்ஆன் ஷரீபின் 30–வது பாகமாகிய)

அம்மயத் ஜுஸுவின் தர்ஜுமா

(முதற் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் அம்மயத் ஜுஸுவி லுள்ள எல்லா ஸூறுக்களும் தர்ஜுமா செய்யப்பட்டு இருக்கின்றன ஒவ்வொரு ஆயத்தையும் முதலில் ஒரு நூதன எழுத்தைக் கொண்டு அச்சிடப்பட்டு, அதை யடுத்து அதற்குத் உச்சரிப்பு காயிதா உடன் போடப்பட்டு, அதனை யடுத்து அந்த ஆயத்தின் பொருளை சுத்தத் தமிழில் போடப்பட்டு இருக்கின்றன. இந்த புஸ்தகம் அம்மயத் ஜுஸுவி லுள்ள ஒவ்வொரு ஆயத்திற்கு பொருளை அறிந்து கொள்ள உதவுவதுடன் அறபியே தெரியாதவர்கள் அம்மயத் ஜுஸுவிலுள்ள எந்த ஸூறுவையும் ஓததெரிந்துகொள்ள உதவும். விலை அணு. 12

2–வது ஒளி

ஸூறத்து யாஸீன் தர்ஜுமா

(முதற் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஸூறத்து யாஸீனி லுள்ள ஒவ்வொரு ஆயத்தையும் 1-வது ஒளியைப் போலவே தமிழ் உச்சரிப்புடன் தர்ஜுமா செய்யப் பட்டிருக்கின்றது. இதன் விலை அணு. 8

3–வது ஒளி

ஸூறத்து தபாறக் தர்ஜுமா

(முதற் பதிப்பு)

இதில் தபாரக் ஸூராவி லுள்ள ஆயத்துகளை ஆயத்து ஆயத்தாக போட்டோ பிளாக்கில் போடப்பட்டு, அவைகளுக்கு கீழ் அந்த ஆயத்துகளுக்கு உச்சரிப்பும் தர்ஜுமாவும் தமிழில் போடப்பட்டுள்ளது. இதன் விலை அணு. 8

ஷெ மூன்று ஒளிகளும் சேர்த்து கலிகோ பைண்டு ரூ. 1–8–0

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ். 5

உனது கடிகாரம்.

ஏறக்குறைய எல்லாரும் ஒரு கை கடிகாரத்தையுடையவர்களாய் இருந்தும், அவைகளை யுடையவர்களுக்கு கை கடிகாரத்தைப் பற்றி, அவர்களுடைய அதே பெருமானமுள்ள மற்ற சமான்களை விட, குறைந்த அளவில் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள்.

உனது கை கடிகாரம் எவ்வளவு அளவுக்கு சரியாக ஓடும் என எதிர்பார்க்கிறாய்? உனக்கு சரியாக ஓடும் கை கடிகாரமும் அதிக நாள் உழைக்கும் கை கடிகாரமும் வேண்டுமானால், உனக்கு விருப்பமான கடிகாரங்களில் எவ்வளவுக்கு எவ்வளவு பெரிய தானதை தேர்ந்தெடுக்க முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு பெரிய கை கடிகாரத்தையும் தேர்ந்தெடுப்பாயாக. கை கடிகாரம் எவ்வளவுக்கு எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அதை செய்ய, அதை ரிபேர் செய்ய, அதை சுத்தமாக செய்ய சுலபம்; ஒவ்வொரு பாகமும் கனத்ததாக இருக்கும். ஒரு மனிதன் அணியும் படியான பெரிய நல்ல கடிகாரம் ஒரு ஆயுள் வரை சரியாக ஓடக்கூடும். ஒரு நல்ல கை கடிகாரம், ஒரு ஸ்திரி அணியும் படியான அளவு உள்ளது, பாதுகாப்புடன் இருந்தால் சரியாக சுமார் 25 வருடம் ஓடும். லக்ஷக்கணக்காக ஒவ்வொரு வருஷமும் வாங்கப்படும் கை கடிகாரங்கள் மணிக்கட்டில் கட்டும் படியானவைகள். ஆனால் ஜேபியில் வைக்கும் படியான கடிகாரங்கள் மணிக்கட்டில் கட்டும் கை கடிகாரங்களை விட சரியாக ஓடும் படியானவைகளாயினும் சௌகரியத்தையே நாடுகின்றனர்.

ஒரு கடிகாரம் கையில் அணியப்பெற்று, விடாமல் ஆடப்பட்ட போதிலும் ஏறக்குறைய சரியாக ஓடுவது ஒரு ஆச்சரியமே. சில கை கடிகாரங்கள் ஒரு நாளைக்கு 5 வினாடியை விட அதிகமாக தவறுதல் இல்லாமல் சரியாக ஓடும் படியாக செய்யப்பட்டு, விற்கப்படுகின்றன. அவைகள் உபயோகிக்கும் போது ஒரு நாளைக்கு 25வினாடி தவறுதல் இருந்தால் மோசமில்லை என கருதப்படுகிறது. நடுத்தரமான விலையுள்ள கை கடிகாரம் ஒரு நாளைக்கு ஒரு நிமிஷம் தவறுதலாக இருப்பது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது என கருதப்படுகிறது. குறைந்த விலையில் விற்கப்படும் கை கடிகாரங்கள் ஒரு நாளைக்கு 5 நிமிஷம் தவறுதல் செய்வதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

ஜூவல்

ஜூவல் என்பது டைமன்ட் என்னும் வைரகற்கள். கடிகாரம் ஓடும் போது ஓடும் படியான கடிகாரத்தின் பாகங்கள், அவைகளை தாங்கி நிற்கும் படியான பாகங்களில் பட்டு அவைகளை, தேய்த்து

விடாமல், நிற்கும் படியான பாகங்களில் ஜுவல்களை வைத்து அந்த ஜுவல்களில் ஓடும்படியான பாகங்களை ஓடும்படி செய்யப்படுகின்றன. உலகத்தில் உள்ள எல்லாவித கடினமான சாமான்களை விட ஜுவல் என்னும் வைரம் மிக கடினமானது. ஆகையால் ஜுவலில் ஓடும் படியான எந்த பாகம் பட்டு தேய்ந்தாலும் ஜுவல் தேயாது. காள டைவில் ஓடும்படியான பாகம் தேய்ந்து விட்டால், அதை மாத்திரம் மாற்றி விட்டால் கடிகாரம் புதிய கடிகாரம் போல் இருக்கும். எல்லா நல்லவித கடிகாரங்களும் ஜுவல்களை கொண்டது தான். ஆனால் எல்லா ஜுவல்களை கொண்ட கடிகாரங்களும் நல்ல கடிகாரங்கள் அல்ல. ஜுவல்கள் அவ்வளவு விலையுயர்ந்த சாமான்கள் அல்ல. சாதாரணமாக ஒரு கை கடிகாரத்தில் அதிகமாக தேயும் படியான ஏழு இடங்களில் ஜுவல்கள் வைக்கப்படும். ஆனால் எல்லா முக்கியமான தேயும் படியான இடங்களிலும் ஜுவல்களை வைப்பதாய் இருந்தால் 17 ஜுவல்கள் தேவைப்படும். வெகு சிறந்த ஜேபு கடிகாரங்களுக்கு 23 ஜுவல்கள் இருக்கின்றன. சில சமயம் ஜுவல்கள் வீணாக விற்பனைக்காக வைக்கப்படும். ஜுவல்களை கணக்கிட்டு வாங்குபவர்களை ஏமாற்றுவதற்காகவே இப்படி செய்யப்படுகிறது. அவைகள் வைக்கப்பட்ட இடங்கள் அதிக தேயக்கூடிய இடங்களாக இருக்காது. வெகு சுலபமாக அவைகளை வைக்கக்கூடிய இடங்களாக இருக்கும். ஆகையால் ஒரு கடிகாரத்தின் ஜுவல்களின் எண்ணிக்கைகளைக் கொண்டு அவைகளை வாங்க தீர்மானித்து விடாதீர்கள்.

உனது கடிகாரத்தை எவ்வாறு பாதுகாப்பாய்?

தூசிகளே கடிகாரத்தின் முக்கிய விரோதி. சிறு பல் சக்கரங்களில் இவைகள் பட்டு அவைகளை சிக்கச் செய்கின்றன. அவைகளில் இருக்கும் எண்ணெயை கடினமாக ஆகும்படி செய்து விடுகின்றன. உனது கடிகாரத்தை வெகு கை தேர்ந்த கடிகார ரிப்பேர் செய்பவனைத் தவிர வேறு யாரிடமும் கொடுத்து திறக்கச் சொல்லாதே; காற்றில் உள்ள தூசிகளும், உனது மூச்சிலும் விரல்களிலும் உள்ள நீரும் கடிகாரத்தைக் தொந்தரவு செய்யும். ஒரு மனிதனின் கையில் அணியும் கடிகாரங்களில் சதாரண அளவுள்ள ஒரு கடிகாரம் இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை சுத்தம் செய்து எண்ணெ போடப்பட வேண்டும். அதைவிட சிறியகடிகாரங்கள் ஒரு வருடம் அல்லது 18 மாதத்திற்கு ஒரு முறை சுத்தம் செய்து எண்ணெப் போடப்பட வேண்டும். இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட எந்த எண்ணெயும் மேலே சொல்லப்பட்ட காலத்திற்குள் காய்ந்து கடினமாகி விடும். அதைவிட அதிக நாட்களுக்கு காயாமலும் கடினமாகாமலும் இருக்கும் எண்ணெ கண்டு பிடிக்கப்படவில்லை. எவ்வள

வுக்கு எவ்வளவு ஓட்டம் சிறியதாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு இவ்வாறு எண்ணெ காய்தல் சீக்கிரமாக ஆகும்.

ஒரு கடிகாரத்தின் கண்ணாடி உடைந்தால் அதை ஒரு காகித உரையில் போட்டு உனது கடிகாரக்காரனிடம் எடுத்துக் கொண்டு போக வேண்டும். ஒரு துணியிலோ அல்லது ஒரு கை குட்டையிலோ சுற்றி எடுத்துக் கொண்டு போனல் தூசி கடிகாரத்தில் சென்று விடும். முள்களும் உடையக்கூடும். உனது கடிகாரம் ஒரு நுண்ணிய சாமாஞகையால் அதை அவ்வாறே கருதி கொள்வாயாக.

நினைத்த நேரத்தில் சாவி கொடுப்பது கடிகாரத்திற்கு நல்லதல்ல. காலையில் உனது கடிகாரத்தை கையில் அணிய எடுக்கும் போது அதை முழுசாவி கொடுத்து மாட்டிக்கொள்ளும் வழமையை கையாளுவது சிறந்தது. அவ்வாறு செய்வதால் முழு பலத்தையுடைய சாவியுடன் வேலையை தினந்தோறும் ஒரே நேரத்தில் ஆரம்பிக்கிறது. இவ்வாறு செய்தால் உனது கடிகாரம் தினந்தோறும் ஒரேவிதமாகஓடும். உனது கடிகாரத்தை உபயோகித்தாலும் இல்லாவிட்டாலும் தினந்தோறும் சாவி கொடுக்க வேண்டும். இல்லாவிடில் எண்ணெ கடினமாகக் கூடும். தினந்தோறும் முழு சாவியையுங் கொடுக்க தவருதீர்கள். அதிகமாக சாவி, குறைவாக சாவி என்பதே கிடையாது. சாவி கொடுக்கும் போது கடினமாக கடினமாக ஜாக்கிரதையுடன் கொடுக்க வேண்டும். கடிகாரத்தில் உள்ள மெயின் ஸ்பிரிங் கட்டியான உடன் சாவி கொடுப்பதை நிறுத்தி விடவும். கை கடியாரத்தின் முள்ளுகளை பின் புரமாக திருப்புவது தவறுதல் என்றுச் சொல்லப்படும் கதையை நம்பாதீர்கள். கை கடிகாரத்திற்கு முன்னும் பின்னுமாக சாவி கொடுப்பது அவசியம் இல்லை. ஆனுல் அவ்வாறு கொடுப்பது சௌகரியம்

பெண்கள் தங்களின் பைகளில் கடிகாரங்களை எடுத்துச் செல்லக் கூடாது. மனிதர்களை விட பெண்களுக்குத்தான் கடிகார தொந்தரவு வருகின்றனவாம். பெண்கள் அவர்களின் பைகளில் கை கடிகாரங்களை போடப்பட்டால் அவைகளின் எண்ணெ தூள்கள், தூசி முதலியவைகள் கடிகாரத்திற்கு உள்சென்று ஓடும் படியான பாகங்களில் பட்டு கடிகாரங்களை கெடுக்கின்றன.

கையை கழுவும் போது கடிகாரத்தை எடுத்துவிடு. சமைக்கும் போதும் கை கடிகாரத்தை எடுத்துவிடு. அடுப்பு சூடு கடியாரத்தின் உள் உள்ள எண்ணெயை பாதிக்கும். ஒரு துளி தண்ணீரைவிட சமைக்கும் போது ஏற்படும் ஆவி ஒரு கடிகாரத்தினுள் சுலபமாக சென்று விடும். ஒரு துளி தண்ணீரும், ஆவியும் ஒரே அளவுக்கு கடிகாரத்தை துரு பிடிக்கச் செய்யும். படுக்கும் போது கடிகா

ரத்தை அணியாதே; படுக்கையிலுள்ள தூசி அதனுள் சென்று விடும். உனது கடிகாரத்தை தவறுதலாக தண்ணீரில் போட்டு விட்டால் அதை பெட்ரோலில் தோய்த்து உடனே கடிகார ரிபேர் ஆளிடம் கொண்டுபோ. தாமதித்தால் துருபிடித்து அதிக நாசத்தை விளைவித்து விடும்.

ஜாக்கிரதையாக உனது கடிகாரத்தை ரிபேர் செய்ய ஆளை தேர்ந்தெடு. சரியான அளவுக்கு தெரியாத ஒரு கடிகார ரிபேர் ஆசாமி ஒரு கடிகாரத்தை, அஜாக்கிரதையாக உபயோகிக்கும் ஆளை விட அதிகமாக நாசத்தை விளைவிக்கக் கூடும். உன்னிடம் விலையுயர்ந்த கடிகாரம் இருக்குமாயின் அதை சுத்தம் செய்து எண்ணை போடும் செலவைக் கண்டு பயந்து விடாதே. அதன் ஒவ்வொரு நுட்பமான பாகத்தையும் பிரித்து, சுத்தம் செய்யும் படியாக ஒரு மருந்து ஜலத்தில் போடப்பட்டு, அவைகளில் உள்ள தூசி, அழுக்கு, கட்டிப்போன எண்ணை இவைகள் எடுக்கப்பட வேண்டும். பிறகு எடுக்கப்பட்ட எல்லா பாகங்களையும் பூட்டப் பட்டு நேரம் சரியாக ஓட சரிபடுத்தபட வேண்டும். கடிகார ரிபேர் ஆட்கள் சாதாரணமாக சுத்தம் செய்ய குறைந்த பணம் ஆகும் என்று சொல்லக்கூடும். ஆனல் எல்லாவற்றையும் பிரித்து சுத்தம் செய்வதைத் தான் நாம் விரும்ப வேண்டும்.

அதிக பணம் கொடுத்து கடிகாரம் வாங்குவதாய் இருந்தால் நம்பத்தகுந்த கடிகாரகடைகளுக்கு போகவும். கடைக்காரனிடம் உனக்கு எதற்கு கடிகாரம் தேவையென சொல்லவும். அதாவது உனக்கு கடிகாரம் ஒரு ஆபரணமாக இருக்க வாங்குகிறுயா? அல்லது மணி சரியாக போகுவதற்கு வாங்குகிறுயா? என்று சொல்லவும். அது தினந்தோறும் எவ்வாறு அனுபவிக்கப்படும் என்பதையும் சொல்லவும்.

கடிகார மெஷினை கொண்டுள்ள பொன்னுலும், வெள்ளியாலும் செய்யப்பட்ட பெட்டி மெஷினை காப்பாற்ற தகுந்த அளவு கனமான தகுடுகளையுடையதாக இருப்பதில்லை. கடிகாரத்தை உனது பெருவிரலுக்கும் முதல் விரலுக்கும் மத்தியில் வைத்து சற்று நசுக்கி பார்க்கவும். கடிகாரத்தின் முதுகு வளையுமானுல் அது கனமான பெட்டி அல்ல என்று தெரிந்து கொள். ரோல்ட் கோல்ட் பெட்டிகளும் இன்னும் பூசப்பட்ட மற்ற பெட்டிகளும் தகுதிக்குத் தக்கவாறு நாளடைவில் தேய்வடையைக் காண்பிக்கும்.

ஸ்டேயின் லெஸ் ஸ்டீலில் (துருப்பிடிக்காத எஃகு) செய்யப் பட்ட பெட்டி அதிக நாள் உழைக்கும்; வேர்வையால் நிறம் மாறுது. ஆனல் முதுகு மாத்திரம் ஸ்டையின் லெஸ் ஸ்டீலாலும்

சுற்றி ரோல்ட்கோல்ட் அல்லது மற்ற அழகான உலோகங்களாலும் செய்யப்பட்ட பெட்டியில் நாளடைவில் சுற்றி யிருக்கும் பலம் குறைந்த உலோகம் பலமுள்ள முதுகிலிருந்து தனியாக வந்து விடும். ஆகையால் முழு பெட்டியும் ஸ்டெயின் லெஸ் ஸ்டீலில் செய்யப்பட்ட கடிகாரமே நல்லது.

"ஸ்விஸ் வாட்ச்" என்று சொல்லப்படும் பெயரைப் பார்த்து ஏமாந்து விடக்கூடாது. (ஸ்விட்சர்லாந்தில் செய்யப்படும் கடிகாரங்களுக்கு "ஸ்விஸ் வாட்ச்" என்று சொல்லப்படும்) ஸ்விட்சர் லாந்தில் உள்ளவர்கள் உலகத்திலேயே வெகு நல்ல கடிகாரங்களை தயார் செய்கிறார்கள். ஆனால், அவர்கள் குறைந்த விலையுடை யதும், மோசமான கடிகாரங்களையும் கூட தயார் செய்கிறார்கள்.

குறைந்த பணத்தில் ஒரு சரியாக போகும்படியான கடிகாரம் வாங்க உத்தேசத்துடன் போனால் விலையுயர்ந்த உலோகத்தால் செய்யப்பட்ட பெட்டிகளைக் கொண்ட கடிகாரங்களை வாங்காதீர் கள். தேதிகளையும், கிழமைகளையும், இன்னும் வேறு விசேஷங் களையும்காட்டும் கடிகாரம் அதிக விலையாகும். அவைகளை செய்ய கஷ்டம்.

"வாட்டர் புரூப்" என்று விளம்பரம் செய்யப்படும் கடிகா ரங்கள் குறைந்த பக்ஷம் 5 நிமிஷம் வரை ஜலத்தில் 80 அடி ஆழத்தில் வைக்கப்பட்டால் ஜலத்தை அதனுள் செல்ல விடாமல் தடுக்க முடிய வேண்டும். "வாட்டர் ரெஸிஸ்டன்ட் வாட்ச்" என்று விற்கப்படும் கடிகாரம் மேலே சொன்ன அளவுக்குகூட ஜலத்தை தடுக்க முடியாது. அவைகள் ஜலத்தின் ஆவியைக்கூட தடுக்குமா என்று நிச்சயமாக சொல்ல முடியாது. ஒரு உண்மை யான "வாட்டர் புரூப்" கடிகாரம் தூசியையும், துரு பிடிக்கச் செய்யும் ஆவிகளையும், ஜலத்தின் ஆவிகளையும் கடிகாரத்தின் உள் செல்லாமல் தடுக்கும்.

கடிகாரம் வாங்கும் போது பார்த்து வாங்க வேண்டும். சாதாரணமாக கடிகாரத்தின் பெட்டி திறக்க முடியாத அளவு கெட்டியாக இருக்க வேண்டும். அந்த பெட்டி கடிகாரம் ரிபேர் செய்பவன் கருவி கொண்டல்லாமல் திறக்க முடிய கூடாது. சாவி கொடுக்கும் படியான அந்த சிறு சக்கரத்தை சுலபமாக வெளியே இழுத்து முள்ளை தள்ளமுடியுமானதாக இருக்க வேண் டும். அதை உள்ளே தள்ளியதும் உடனே உள்ளே சுலபமாக போக வேண்டும். சாவி கொடுக்கும் படியான இடம், முள்ளை திருப்பும் படியான இடம் ஆகிய இந்த இரண்டு இடத்தைத் தவிர வேறு மத்திய இடங்களில் அது நிற்க கூடாது. ஒரு நல்ல கடிகா ரத்தின் சப்தம் நன்றாக கேட்கும் படியாக, சுருசுருப்பாக, ஒரே

நேரத்தைக் கொண்டதாக இருக்கும். வாங்கும் கடிகாரம் ஆறு மாதத்திற்கு மேலாக கடையில் யிருந்ததாக தெரிந்தால் கடிகாரம் விற்பவன் அதை சுத்தம் செய்து எண்ணை யிட்டு கொடுக்க தயாராக இருக்க வேண்டும்.

ஒரு விலையுயர்ந்த கடிகாரத்தை வாங்குவது பணத்திற்கு மாத்திரம் வாங்குவதல்ல. ஒரு நம்பிக்கையைப் பொருத்தும் வாங்கப் படவேண்டும். கடிகாரம் செய்பவன் கொடுக்கும் கேரண்டிக்கு மேலாக ஒரு விலை யுயர்ந்த கடிகாரத்தை விற்பவன் அதற்கு கேரண்டி கொடுக்கக் கூடியவனாக இருக்க வேண்டும். ஒரு நல்ல கைதேர்ந்த கடிகாரகாரனிட மிருந்து உனது கடிகாரத்தை வாங்கினால் ஏதாவது தவறுதலாக போனாலும் அதை அவனிடம் எடுத்துச் சென்றால் அவன் அதை சரிசெய்துக் கொடுத்து அதிக நாள் உழைக்கச் செய்ய உனது நன்பனாக இருப்பான்.

யூனானி வைத்திய முறைகள்.

(தமிழ் புஸ்தகம்)

இது வைத்தியர்களுக்காக எழுதப்பட்ட புஸ்தகம் அல்ல. கைமருந்துகள் என்று சொல்லப்பட்டு வீடுகளில் பெண்கள் தாங்களே செய்து அவ்வப்போது உபயோகப் படுத்தும் மருந்துகள் விஷயமாக, எவராலும் எளிதில் படித்து அறிந்துக் கொள்ளுமாறு எழுதப்பட்டது.

இது 282 பக்கங்களை கொண்ட பெரிய புஸ்தகமாகும். நேர்த்தியான கலிகோ பைண்டு செய்யப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும் எப்பொழுதும் இருக்கவேண்டிய புஸ்தகங்களுள் இது மிகவும் முக்கியமானது விலை ரூ. 3–0–0

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பாலோவின் மர்மம்.

அத்தியாயம் 1

இரவு நிசப்தமாக யிருந்தது. வரட்சியான நிலக்காற்று வீசிக் கொண்டிருந்தது. பள்ளத்தாக்கிலுள்ள வயலிலிருந்து, அடுத்த பட்டணம் பக்கம் நோக்கினுல், அங்குள்ள விளக்குகளின் பிரகாசம் ஆகாயத்தில் தெரியவந்தது. ஆனுல் அந்த வெளிச்சத்தையும் இடையிலுள்ள சிறுகுன்றுகள் கொஞ்சம் தடுத்துக் கொண்டிருந்தன.

இந்த வயல் மிகச்சிறியது. அதில் ஒரு சிறிய வீடு இருந்தது. வீட்டின் பக்கத்தில் சில பசுக்கள் நிற்பதாக தெரிந்தது. அவ்வீட்டினுள் விளக்கு எரிந்துக்கொண்டிருந்தது. இந்த வீட்டின் வெளிச்சத்தைத் தவிர, மற்ளுெரு வெளிச்சம் இன்னும் ஒருமைல் தூரத்தில் தெரிகிறது. இவ்விரண்டு வெளிச்சம்தான் இரண்டு வீடுகள் அப்பள்ளத்தாக்கில் இருப்பதை அவ்விருட்டில் உணர்த்தியது.

ஒரு சிறிய நடைபாதை அவ்வீட்டிலிருந்து சுமார் ¼ மைல் தூரத்திற்கு தெரியவந்தது. அந்த இருட்டில் இந்த நடைபாதை சிறிது வெண்மையாக தெரிந்தது. திடீரென்று மெயின்ரோட்டில் வந்துகொண்டிருந்த காரின் வெளிச்சத்தில் இந்த நடைபாதை நன்ருக தெரிந்தது. வெகு வேகமாய் ஓடிக்கொண்டிருந்த அக்கார் இந்நடைபாதையினருகே வந்ததும் அப்படியே திரும்பியது. வேகமாக வந்த கார் திடீரென்று திரும்பியதால் கவிழ்ந்து விழுந்திருக்கலாம். ஆனுல் அதை ஓட்டியவன் சாமர்த்தியமாக பிரேக் போட்டு திருப்பியுள்ளான். பின் நடைபாதையில் அக்கார் ஓடி அவ்வயலின் நடுவிலுள்ள வைக்கோல் போர் குவியலில் இடித்து நின்றது. அவ்வாறு இடித்ததும் வைக்கோல் கொஞ்சம் காரில் மூன் பாகம் பேரில் விழுந்து பாதி காரை மறைத்துவிட்டது. காரின் விளக்குகள் அணையப்பட்டன. காரின் கதவைதிறந்து ஒரு மனிதன் சீக்கிரம் வெளிவந்து கதவை மறுபடியும் சப்தமிடாமல் பூட்டினுன்.

அம்மனிதன் ஒரு சிறிய டார்ச் மூலம் அவ்வைக்கோலின் பக்கத்தில் தேடினுன், அவன்தேடிய வைக்கோல் குத்திபோடும் இரும்பு ஆயுதம் கொஞ்ச தூரத்தில் கிடந்தது. அதை எடுத்து வைக்கோல் போரிலிருந்து வைக்கோலை எடுத்து காரின்மேல் முழுவதும் போட்டான். சில நிமிஷங்களுக்குள் கார் வைக்கோலால் மூடப்பட்டு மறைந்து விட்டது.

அவ்வாயுதத்தை கீழேபோட்டுவிட்டு, தான் வந்த வழியை உற்று நோக்கினன். தூரத்தில் கார் விளக்குகளின் வெளிச்சம் தெரிந்தது. அவை நின்று கொண்டிருப்பது போல் தெரிந்தது. இன்னும் கொஞ்சநேரம் கவனித்தான். அவ்விளக்குகள் அசைய ஆரம்பித்தன. ஒருமைல் தூரத்திற்கப்பாலுள்ள ஒரு குன்றின் மேல் விளக்கு நகருவதைக் கவனித்தான்.

அம்மனிதன் தனது கோட்பாக்கெட்டில் தனது கைதுப்பாக்கி யிருப்பதை கையால் தடவி பார்த்தபின், அவ்வயலிலுள்ள அச்சிறு வீட்டை நோக்கிப்போனுன். நடந்துபோகும்போது இன்னொரு தடவை துப்பாக்கியில் கையை வைத்தான். அதை தொட்டதும் அவனுக்கு ஒரு தனி தைரியம் ஏற்பட்டது. கையை பாக்கெட்டி லிருந்து எடுத்துவிட்டு நடந்தான்.

பின்னல் குன்றுகளுக்கருகில் வந்த கார்விளக்குகள் கொஞ்சம் நகர்வதும் கொஞ்சம் நிற்பதுமா யிருந்ததை கவனித்தால் ஏதோ தேடுவதைப் போல் தெரிந்தது. ஆனல் இம்மனிதன் திரும்பிப் பார்க்கவில்லை. அச்சிறு வீட்டைநோக்கி நடந்தான்.

அத்தியாயம் 2

அவ்வயலிலுள்ள சிறுவீட்டின் சமையல் அறையின் அடுப் பின் முன் ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள். அடுப்பின் சூட் டினல் அவள் முகம் வியர்த்தவண்ணமா யிருந்தது. அடுப்பில் சாப்பாடு தயாராகிகொண்டிருந்தது. கொஞ்சம் அருகாமையில் ஒரு மேஜையின்முன் அவளின் புருஷன் டாம் என்பவன் உட்கார்ந்து ஒரு கணக்கு நோட்புக்கை வைத்துக்கொண்டு கூட்டல் போட்டுக் கொண்டிருந்தான். ''என்னல் இந்த வேலைபார்க்க முடியவில்லை காற்றும வரட்சியாக யிருக்கிறது. அதுவுமல்லாமல் அடுப்பு சூட்டி னுலும் இந்தஎண்ணெ விளக்கின் சூட்டினுலும் ஒருவேலையும் செய்ய முடியவில்லை'' என்றுன். ''சாப்பாடு சமைத்துதானே ஆகவேண் டும். கணக்கு நோட்புக்கை மூடிவையுங்கள். நாளைபார்க்கலாம். கொஞ்ச நேரத்தில் சாப்பாடு தயாராகிவிடும்'' என்றுள். அவன் அக்காற்காலியிலேயே காலைநீட்டி சாய்ந்தான். அவள் சமையல் வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

இச்சமயத்தில் வெளியில் யாரோ நடப்பதாக காலடிசப்தம் கேட்டது. அவன் ஆச்சரியப் பட்டு அவளைப்பார்த்து ''வெளியில் யாரோ வருவதைப்போல் தெரிகிறது இந்நேரத்தில் யார்வரக் கூடும்?'' என்றுன். அவன் மிகவும் களைத்திருந்ததால் வெளியில் வந்து பார்க்கவில்லை. அந்த நாற்காலியில் உட்கார்ந்த வண்ணமாக வாயலைப் பார்த்தான். ''என்ன நூதனமாகயிருக்கிறது. இந்நேரத்தில்

யார் வருவார்?'' என்றாள். "எவனாவது வழி தவறி, நம்மிடம் கேட்க வந்திருக்கலாம்'' என்று சொல்லி நாற்காலியை விட்டு எழுந்து நின்றான்.

திடீரென்று ஒரு மனிதன் கதவைத் திறந்துகொண்டு வீட்டினுள் வந்தான். வெள்ளை ஷர்டும், உயர்தரமான ஸூட்டும், கழுத்தில் டையும்கட்டி, ஒரு கையில் ஹேட் (தொப்பி) யுடனும் இருந்தான். அவனின் மற்றொரு கை கோட்டின் ஒரு ஜேபினுள் இருந்தது. வயது சுமார் 40 யிருக்கும், உடம்பு கொஞ்சம் பருத்ததாக யிருந்தது. அவன் வந்ததும் அவன் வீட்டை சுற்றி மூலை முடுக்குகளெல்லாம் பார்த்தான். வீட்டினுள் உள்ள இருவரையும் கூர்ந்து கவனித்தான். "நான் வந்து உட்காரலாமா?'' என்றான். அதற்கு டாம் "தாராளமாய் வந்துஉட்காரலாம். வாருங்கள் வழிதவறி இவ்விடம் வந்தீர்களோ?'' என்றான். ஜேன் என்னும் அப்பெண்ணுக்கு அவனைப்பார்த்ததும் ஏதோ மனதில் கொஞ்சம் பயம் யேற்பட்டது. டாமுக்கும் அம் மனிதன் அந்நேரத்தில் அங்குவந்தது மனதிற்குபிடிக்கவில்லை. அம்மனிதன் திரும்பி மெதுவாக போய் வாயற்கதவை மூடினான். "எனக்கு கதவு மூடி யிருக்கவேண்டும்'' என்றான். பிறகு இருவரையும் பார்த்தான். "என்னுடைய நடத்தை உங்களுக்கு நூதனமாக யிருக்கிறதா?'' என்றான். டாம் கொஞ்சம் சிரித்ததைப் போல் பாவித்து "அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்றான்.

வந்தவன் நாற்காலியில் உட்கார்ந்து "நான் உங்களை பயமுறுத்த வரவில்லை. கடவுளுக்குத் தெரியும். இந்நேரத்தில் நான் இவ்வாறு வந்தது உங்களுக்கு கொஞ்சம் பயம் கொடுத்திருக்கலாம். நீங்கள் தயவுசெயது இங்கு உட்காருங்கள். சில விஷயங்கள் உங்களிடம் சீக்கிரம் சொல்லவேண்டிய திருக்கிறது'' என்றான். உடனே ஜேன் அவன் குறித்தயிடத்தில் பயந்து உட்கார வந்தாள். திடீரென்று என்னமோ நினைத்துக் கொண்டு "எனக்கு ஒன்றும் புரியவில்லை; இவ்வீடு எங்களுடையது, நீங்கள் யாரோ அன்னியர் இங்குவந்து எங்களை அதிகாரம்......'' என்றாள். "என்னால் அதிகாரம் செய்ய முடியும். செய்தும் ஆகவேண்டும். மரியாதையாய் உட்காருங்கள். சில விஷயங்கள் முதலில் கேட்கவேண்டும்'' என்றான். ஜேன் என்ன சொல்வதென்று தெரியாமல் பயந்து உட்கார்ந்தாள். டாமுக்கு கோபம் வந்து "நீயார்? எதற்காக......'' என்று சொல்வதற்குள் "என் பெயர் பாஸோ. மரியாதையாக உட்காருங்கள்'' என்று அதிகாரத்துடன் சொன்னான் வந்தவன். டாம் உட்காராமல் எழுந்து நிமிர்ந்து நின்றான். உடனே பாஸோ தனது வலது கையை கோட்டின் ஜேபி

லிருந்து வெளியில் எடுத்தான். கையில் ஒரு கைத் துப்பாக்கி தோன்றியது. "உட்காருங்கள். நான் சீக்கிரமாக சில விஷயங்கள் சொல்ல வேண்டும்" என்ருன். டாம் அதைப்பார்த்து கையிலிருப்பது உண்மையான துப்பாக்கிதான் என்றறிந்து பயந்து உட்கார்ந்தான். துப்பாக்கியை ஜேபியில் போட்டபின் "நீங்கள் இருவர் மாத்திரம்தான் இங்கிருக்கிறீர்களா?"

டாம் : ஆம்.

குழந்தைகள் ?

ஜேன் : இல்லை

நல்லது ! வேறு யாரும் இங்கு உண்டோ ?

டாம் : யாருமில்லை.

"உங்கள் இருவரைத் தவிர அருகாமையில் யாருமில்லையா ? கொஞ்ச தூரத்தில் இன்னெரு விளக்கு வெளிச்சம் தெரிந்ததே"

ஜேன் : "ஓஹோ! அதா? அந்த வீடு இங்கிருந்து ஒரு மைல் தூரம் உண்டு. அங்கு ஒரு கிழவன் தனியாக இருக்கிருன் "

" நல்லது நான் தற்போது தப்பித்துக் கொண்டு ஓடி வருகிறேன் "

டாம் : " பின்னல் போலீஸ் வருகிருர்களா ? "

" இல்லை. போலீஸாயிருந்தால் எனக்கு சந்தோஷ மாயிற்றே. போலீஸ் பிடித்தால், அப்படி தவறு செய்திருந்தாலும் ஒரு 2 வருடம் ஜெயிலில் போடுவார்கள். அவ்வளவு தானே செய்வார்கள். ஆனல் தற்போது என்னைத் தேடிக்கொண்டு வருபவர்களிடம் அகப்பட்டாலோ, நான் சாவதுமல்லாமல் மிக துன்பப்பட்டு சாக வேண்டிய தேற்படும்"

ஜேன்: "நீ என்ன குற்றம் செய்தாய்? கொலை எதுவும் செய்து வந்திருக்கிருயா ?

எனக்குத் தெரிந்து நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. நான் கொலை பாதகனுமல்ல. ஒரு முறை ஒரு சிறு குற்றம் செய்து 2 வருடம் ஜெயிலில் இருந்துள்ளேன். அதனல் நான் கொலைபாதகனென்றல்ல "

பின்பு அவ்விருவரையும் மறுமுறை கூர்ந்து பார்த்தான். " நீங்களும் பணத்திற்கு மிக கஷ்டப்படுபவர்கள் போல் தோன்றுகிறது " என்ருன். டாம் கோபத்துடன் " எங்கள் நிலைமையைப் பற்றி நீ யார் பேசுவதற்கு ? என்று கேட்டான். அதற்கு பாலோ

"கோபிக்க வேண்டாம். புதிய குடித்தனம் நடத்துவது என்றால் கஷ்டம் தானே!" என்றான். "நாங்கள் புதிய குடித்தனம் நடத்துகிறோ மென்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று டாம் கேட்டான். "நீங்கள் இருவரும் இள வயதுடையவர்களாக தோன்றுகிறது. அதுவுமல்லாமல் உனது விரலிலுள்ள கலியாண மோதிரம் புதியதாக தோன்றுகிறது. அதைப் பார்த்தால் கலியாணமும் சமீப காலத்தில்தான் நடந்திருக்கும்" என்றான் பாஸோ. "கண்ணில் ஏதாவது பூதக்கண்ணாடி வைத்துக் கொண்டு நோட்டமிடுவது போல் சொல்லுகிறாயே! என்று டாம் பதிலளித்தான். "நீங்கள் கஷ்டப்படுவது உண்மைத்தான். நான் வேண்டுமானால் உதவிசெய்து கஷ்டத்தை நிவர்த்தி செய்ய முடியும். சில நாட்களுக்கு நான் இங்கிருக்க யோசிக்கிறேன். என்னிடம் பணம் நிறைய உண்டு. ஆனால் வாழ்நாட்கள் குறைய உண்டு. நான் உங்களைப் போலுள்ள உண்மைக் குடியானவர்களுடன் வாழ்ந்து வந்தால் என்னைப் பின்தொடர்ந்து வருபவர்கள் என்னை ஒன்றும் கஷ்டம்செய்ய வழிபடாது என்று நினைக்கிறேன். ஆனால் நீங்கள் எனக்கு தங்க இடம் கொடாமல் இன்றிரவே வெளியே போக உத்திரவு செய்தால், நான் இறப்பது உண்மையே. எனக்கு இறப்பதைவிட வாழ்வது மிகப்பிரியம். நான் வாழவேண்டுமானால் நிறைய பணம் செலவாகக்கூடும். நான் ஒன்றிரண்டுநாள் இங்கு தங்குவதற்காக நீங்கள் எவ்வளவு பணம் கேட்டாலும் தருகிறேன். பணம் ஒருபுறமிருக்க, இறக்க போகும் எனக்கு உயிர் கொடுத்து உதவி செய்ததாக இருக்கும். ஆதலால் மனமிறங்கி என்னைக் காப்பாற்றுங்கள்" என்றான். அதற்கு டாம் "நீ சொல்வதெல்லாம் கேட்டோம். நீ யார் என்பது எங்களுக்குத் தெரியாது. நாங்கள் எவ்வாறு உன்னை நம்புவது" என்றான். உடனே பாஸோ தன்னுடைய கோட்டின் உள்ஜேபியிலிருந்து பணநோட்டு கட்டு ஒன்றை எடுத்து அவர்கள் முன் போட்டான். சில நோட்டுகள் கட்டு பிரிந்து வெளியிலும் வந்து விழுந்தன. "என்னை நம்பாவிட்டால் இப்பணத்தையாவது நம்புங்கள்" என்றான் பாஸோ. ஜேன் நோட்டுக்களைப்பார்த்ததும் பிரமித்துவிட்டாள். வருடக்கணக்காய் கஷ்டப்பட்டு சேர்க்கலாமென்றெண்ணி யிருக்கும் பணத்தைவிட அதிகம் பணம் முன்னால் கிடைப்பதைப்பார்த்து ஆச்சரியப்பட்டாள். "பணத்தை எடுத்துக்கொள். நீ சொன்னதெல்லாம் உண்மைதானா? " என்று ஜேன் கேட்டாள். அதற்கு பாஸோ தாழ்ந்த நெஞ்சுங் குரலாக "என்னால் கூடியவரை உண்மை சொல்லி விட்டேன்" என்றான். "நீ எங்களுடன் தங்கியிருந்தால், அவர்கள் உனக்கு கஷ்டம் கொடுக்கமாட்டார்களா?" என்று ஜேன் கேட்டாள். "எனக்கு கஷ்டம் வராதென்று நினைக்கிறேன்." அதற்கு டாம் "நீ அவ்வாறு நினைப்பதால், நீ இன்றுகாலை

வரை தங்கலாம். ஆனல் என்ன விஷயம்!" என்று திடீரென்று எழுந்தான். நாற்காலியிலிருந்த பாஸோவின் கண்கள் மூடப்பட்டிருந்தன. தலை சாய்ந்து கீழேவிழும் சமயம் மேஜையை ஒருகையால் பிடித்துக்கொண்டிருந்தான். தலையை மேஜையின் பேரில் வைத்தவாறு வாயிலிருந்து "கடவுளே! கடவுளே!" என்று சப்தம் வந்தது.

அத்தியாயம் 3

பாஸோ என்பவன் மயக்கமாகி கொஞ்சநேரம் கிடந்தான். டாம், ஜேன் இருவருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஜேன் பாஸோவினருகே போய் முகத்தை உற்று நோக்கினள். அப்பொழுது பாஸோ தன்தலையை நிமிர்ந்து பார்த்தான். அவன் முகம் வெளுத்திருந்தது. "ஒன்றுமில்லை. கவலைப்படவேண்டாம்" கொஞ்சம் மயக்கம் வந்தது அவ்வளவுதான்" என்றான் பாஸோ. அதற்கு ஜேன் "இப்பொழுது சௌக்கியமாக யிருக்கிறதா?" என்றாள். இதற்கிடையில் டாம் "ஏதாவது குடிக்கிறீர்களா?" என்று கேட்டான். பாஸோ சமையல் அறையை நோக்கி "அடுப்பின்மேல் வெந்நீர் இருப்பதுபோல் தெரிகிறது, அதைக்கொடுங்கள் தயவுசெய்து" என்று கேட்டான். உடனே ஜேன் ஒரு டம்ளரில் சுடுதண்ணீர் கொடுக்க, அதை மெதுமெதுவாக குடித்தான். பின்பு டாம் "உங்களுக்கு உடம்பு இவ்வாறிருப்பதால்" என்று சொல்லும் பொழுது, வெளியில் 3, 4 ஆட்கள் அவ்வீட்டை நோக்கி வரும் காலடி சப்தம் கேட்டது. பாஸோ உடனே எழுந்து "இப்பொழுது என்ன செய்வது?" என்று கேட்டான். டாம் கொஞ்சநேரம் யோசித்தபின் ஒருகதவைக் காண்பித்து, அதன்பின் ஒளிந்துக்கொள்ளுமாறு சைகை காட்டினன். பாஸோ அக்ஷணமே யாதொரு சப்தமிடாமல் ஒளிந்து கொண்டான்.

அவ்வீட்டின் கதவு தட்டப்பட்டதும் திறந்தார்கள். ஒரு மனிதன் வாயலில் நின்றுக்கொண்டு, அங்கிருந்த வீடு பூராவும், ஏதோ தேடுவதைப்போல் பார்த்தான். அப்பொழுதுதான் டாம், தனது மேஜையின்பேரில் பணநோட்டுகள் கிடப்பதை பார்த்து, மறைத்துவைக்கவில்லையே என்று பயந்தான். "என்ன விஷயம்" என்று வந்தவரை ஜேன் கேட்டாள். அம்மனிதன் வீட்டினுள் வந்து மரியாதையாக "நாங்கள் வழிதவறிவிட்டோம். எங்களுக்கு சரியான பாதை காண்பித்தால் நலம்" என்றான். "நீங்கள் எங்கு போகவேண்டும்?" என்று கேட்டாள். இதற்கிடையில் டாம், அப்பணநோட்டுகளை கணக்குநோட்புக்கினுள் வைத்து, நோட்புக்கை மூடி, "நமது கணக்கை பின்னல் பார்த்துக்கொள்ளலாம்" என்று தனக்குத் தான் சொல்வதுபோல் கொஞ்சம் உறக்கவே சொல்லிக்

கொண்டான். அவன் செய்தது, ஏதோ தனது சொந்த கணக்கை பரிசோதித்து, தன் பணத்தையும் எண்ணிக்கொண்டிருந்து, அன்னியர் வந்ததும், சாதாரணமாக கணக்குபுக்கை மூடுவதுபோல் தோன்றியது. "நாங்கள் ஒரு சிநேகிதனைப் பின் தொடர்ந்து வந்தோம். எங்களை கொஞ்சம் பின்னால் தொடர்ந்து வருமாறு அவனேதான் சொன்னான். மெயின்ரோட்டிலிருந்து இப்பக்கம் திரும்பியதாக தெரிந்தது. இங்கு வந்திருப்பானென்று நாங்களும் வந்தோம்" என்று வந்தவன் சொன்னான். "இங்கு எதற்காக வரவேண்டும்? இங்கு வரவில்லை. நீங்களும் சிநேகிதர்களாய் இருப்பதால் அவன் எங்கு போவான் என்று உங்களுக்குதானே தெரியும்" என்று டாம் சொன்னான். "இல்லை! உங்களிடம் மறைப்பானேன். அவன் எங்களிடமிருந்து பணத்தை திருடிக்கொண்டு ஓடியிருக்கிறான். அவனைத்தேடிக்கொண்டு வருகிறோம்" என்றான் அம்மனிதன். "ஓஹோ அப்படியா! ஆனால் அவன் இங்கு வரவில்லையே" என்று டாம் சொல்லவே, அம்மனிதன் திரும்பிப்போய்விட்டான்.

அவன் போனதும் வாயற்கதவை மூடிவிட்டு, கதவண்டையே நின்றார்கள். திடீரென்று ஜேன் "அதோபார் நாற்காலியை! பாஸோவின் தொப்பி! வந்தவன் அதைப் பார்த்திருக்கக்கூடுமே!" என்றாள். "ஐயோ அவன் அதைப் பார்த்திருந்தால், நமக்கு ஆபத்துதான். பாஸோ இனி இங்கு தங்கமுடியாது" என்றான் டாம். அதற்கு ஜேன் "வேண்டாம் நாம் அவனை துரத்த கூடாது துரத்தினால் அவர்கள் கட்டாயம் அவனைக் கொன்றுவிடுவார்கள். ஆதலால் துரத்தவேண்டாம்" என்று கெஞ்சினாள். "அவன் இறந்தால் நமக்கென்ன?" என்றான் டாம். "அவனை தற்போது வெளியில் அனுப்புவது எனக்கு பிடிக்கவில்லை, பாவம்" என்று மறுபடியும் ஜேன் சொன்னாள். "சரிவந்தவன் அத்தொப்பியை பார்த்திருக்கலாம். இவ்விஷயத்தை பாஸோவிடம் சொல்லி, என் செய்வதென்று யோசனை கேட்கலாம்" என்று டாம் சொல்லி, பாஸோ ஒளிந்து இருக்கும் இடத்திற்கு போய் மெதுவாக 'எங்கே இருக்கிறாய்?' என்றான். பாஸோ ஜன்னலின் வழியாக வெளியே கவனித்துக் கொண்டிருந்தான். டாம் வந்ததும் "அவர்கள் போகவில்லை வெளியில் நிற்கிறார்கள். நான் எனது பணத்தையும் தொப்பியையும் அங்கேயே விட்டு வந்தேனே, அவர்கள் பார்த்தார்களா?" என்று பாஸோ கேட்டான். "பணம் என்னுடையது போல் தோன்றுமாறு செய்து விட்டேன். ஆனால் தொப்பியை பார்த்திருக்கலாம்" என்றான் டாம். "நான் முட்டாள்தனமாக தொப்பியை மறந்து விட்டேன். கொஞ்சம் மயக்கமிருந்ததால், மறந்து விட்டேன்" என்று பாஸோ சொன்னான். இதற்கிடையில் ஜேன் வந்து "நீ, அவர்களின் பணத்தை திருடிக்கொண்டு வந்தாயாமே" என்றாள். "அது ஒரு கட்டுகதை,

187016

எவ்வளவு பணம் என்று சொன்னார்களா ?" என்று பாஸோ கேட்டான். "ஏதோ பணம் என்றார்கள்" என்று பதிலளித்தாள். "அதெல்லாம் பொய். நீங்கள் நம்பும்படியாக அப்பொய்யை சொன்னார்கள்." அப்பொழுது டாம் "சரி, நீ இங்கிருப்பது அவர்களுக்கு தெரிந்து விட்டது. இப்பொழுது என் செய்வது?" என்று கேட்டான். அதற்கு பாஸோ "அவர்களுக்கு தெரிந்து விட்டதால் நானும் தப்பித்துக் கொண்டு போகத்தான் வேண்டும். ஆனால் எனது உடம்பு சரியில்லாததால் ஒரு மணி நேரம் படுத்தெழுந்தால் நலமென்று நினைக்கிறேன்" என்றான். கொஞ்சம் முன் ஏற்பட்ட மயக்கத்தை விட்டு பாஸோ இன்னும் சரிவர தெளிவடைய வில்லை "சமையலறைக்கு மேல் ஒரு ரூம் உண்டு. அங்கு ஒரு சோபா உண்டு. அதில் வேண்டுமானால் படுத்துக் கொள்ளலாம்" என்றாள் ஜேன். "நாங்கள் இருவரும் விழித்துக் கொண்டிருக்கும் வரை அவர்கள் வரமாட்டார்கள் என்று நினைக்கிறேன்" என்று டாம் சொன்னான். உடனே பாஸோ அவர்களுக்கு வந்தனம் தெரிவித்து விட்டு, மாடிக்குப் போனான். அவன் அறைக்குள் போய் கதவு மூடிய சப்தம் கேட்டது.

பிறகு நிசப்தமாக கொஞ்ச நேரம் கழிந்தது. அப்பொழுது டாம் ஜேனை சமையலறைக்குள் அழைத்துக் கொண்டு போய் "பாஸோவைப் பார்த்தால் நல்லவனாகத்தான் தெரிகிறது. சரி, நாம் சாப்பாடு சாப்பிட வில்லையே. வா, சாப்பிடலாம்" என்றான்.

அன்று நடந்த விஷயத்தால் அவர்கள் மனங்கள் குழப்பமாயிருந்தன. ஆதலால் அவர்களிருவரும் சரியாக சாப்பிடவில்லை. சாப்பிட்ட பின்னும் எங்கும் நிசப்தம் நிலவியது. இன்னும் கொஞ்சம் நேரம் சென்றதும், ஒரு கார் தூரத்தில் புறப்பட்டு போகும் சப்தம் கேட்டது. உடனே ஜேன் "அவர்கள் போய் விட்டார்கள் போல் தெரிகிறது" என்றாள். "இவன் இங்கிருக்கிறான் என்று தெரிந்த பின், பிடிக்காமல் எவ்வாறு போவார்கள் ?" என்று பதிலளித்தான் டாம். பின்பு கொஞ்ச நேரம் கழிந்தது. திடீரென்று மெத்தையில் ஏதோ சப்தம் கேட்டது. "அவன் எழுந்து விட்டான் போல் தெரிகிறது. நான் போய், கார் போன சமாசாரத்தை தெரிவித்து வருகிறேன்" என்று சொல்லி டாம் மெதுவாக மெத்தைக்குச் சென்றான். ரூம் கதவை தட்டினான். திறந்திருக்கவே தானே கதவைத் திறந்து உள் சென்றான். போனவன் அங்குள்ள காக்ஷியைக் கண்டு பிரமித்து விட்டான். வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை டாமுக்கு. மெத்தைக்கு போன டாம் திரும்பியும் வரவில்லை, பாஸோவுடன் பேசும் சப்தமும் கேட்கவில்லை. கீழே காத்துக் கொண்டிருந்த ஜேன் மெத்தைக்கு

ஓடினுள். இவள் வருவதை யறிந்த டாம், "ஜேன்! இங்கு வராதே" என்ருன். "ஏன்? என்ன சமாச்சாரம்" என்று சொல்லிக் கொண்டே அறையினுள் ஸோபாவை பார்த்தாள் அதில் ஒரு மனிதன் கிடந்தான். அவன மார்பில் கத்திகுத்திய காயத்திலிருந்து இரத்தம் கசிந்து அவன் சூட்டின் முன்புறம் நனைந்து கொண்டிருந்தது. அவன் உயிரில்லாமல் கிடந்தான். "இது என்ன டாம்!" என்ருள். "பயப்படாதே" என்று அவளை கட்டி அணைத்தான். ஜேன் முகத்தை திருப்பிக் கொண்டு "அவனில்லையே!" என்ருள். "ஆம்! இவன் பாஸோ அல்ல. அவனைப் பிடிக்க வந்தவன இவன்" என்ருன் டாம். "அப்படியானல் பாஸோ எங்கே?" என்ருள். "மறைந்து விட்டான்" என்று சொல்லி, "நாம் இதைப் போலீஸுக்கு உடனே தெரியப்படுத்த வேண்டும். இந்த அறையில் எதையும் தொடக் கூடாது. வா, நமது காரில் போலீஸ் ஸ்டேஷனுக்கு போகலாம்" என்று ஜேனை அழைத்து தங்களது பெரிய பழைய காரில் ஏறினர்கள். அந்த காரை மிகவும் சிரமத்துடன் ஸ்டாட் செய்து போலீஸ் ஸ்டேஷனை நோக்கி சென்ருர்கள். [தொடரும்.]

முதல்லல் கோஷா நாமா

கோஷா பர்தா விஷயத்தைப்பற்றி ஹக்த ஆலாவின் கலாமாகிய தலீல்களிலும நமது நபிநாயக மவர்களின் திருமொழியாகிய ஹதீஸுகளிலும் வந்திருப்பவைகளை கல்விக் கடல்களாகிய முஹத்திஸின்களும் முபஸ்ஸிரீன்களும் முஜ்தஹீன்களும் தெண்டித்து விபரித்தெழுதி யிருப்பவைகளில் சிலதை சுருக்கமாக சேகரித்தெழுதி முதல்லல் கோஷா நாமா வென்று பெயர் வைத்து தற்கால ஆலிம் மவ்லவிகளில் மஹான்களாகிய பத்து உலமாக்கள் பார்வையிட்டு அச்சிடப்பட்டது. இவைகளெல்லாம் வசனமாக கூறப்பட்டு இருக்கின்றன.

பின்பு இவைகளெல்லாம் சுலபமாக மனதில் வைத்துக் கொள்ளும் பொருட்டு பாடல்களாக பாடப்பட்டு இருககின்றன. இதன் விலை அணு. 8

ஷை அறபுத் தமிழ் விலை அணு. 12

ஹாஜி. M. A. ஷாஹுல ஹமீது & ஸன்ஸ,
நெ. 20, ஹைரோட், திருவலலிகேணி, மதராஸ் 5.

தெருவில் புதையல் கிடைத்தது.

(நவம்பவர் மாதம் மதருஸ் பட்டணத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி)

தெருவில் நடந்து கொண்டு போன ஒருவர் தனக்கு முன்னால் சுத்தமான காகிதத்தில் மூடிய ஒரு வஸ்து கிடப்பதைக் கண்டார். அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். அதனுள் ஒரு தங்க சங்கிலி இருந்தது. அந்த சங்கிலியை கடையிலிருந்து வாங்கிய கேஷ்பில்லும் அதனுடனேயே இருந்தது. அப்போது அந்நகையை எடுத்த அவர் தனக்கு விலையுயர்ந்த ஒரு நகை தெருவிலிருந்து கிடைத்ததென்று சந்தோஷமடைந்தார்.

அந்நேரத்தில் அங்கு வந்த இருவர்கள் அவரிடம் கீழே இருந்து எடுத்த அந்த வஸ்துவை அவர்களிடம் காண்பிக்கும்படி ஏவினார்கள். அவர் சற்று மறுத்தவாறு அதை காண்பித்தார். அவர்கள் அந்த நகையை தாங்கள் தான் கீழே இருந்து முதலில் எடுத்தவர்கள் எனவும் அது அவர்களுக்குத்தான் சேர வேண்டியதெனவும் கூறினார்கள். நகையை எடுத்தவருக்கும் பின்வந்த இருவருக்கும் ஒருவித தகராறு வந்தது. அப்போது இருவர்களில் ஒருவர் அந்த நகையை மூன்று பேருமாக பங்கு வைத்தால் நலம் என கூறி பங்கு வைக்கும்படி கோரினார். ஒரு நகையை மூன்று பேர் பங்கு வைப்பதற்கு பதில் எடுத்தவர் கையில் அணிந்திருந்த மோதிரத்தை இவ்விருவர்களுக்கும் கொடுத்து விட்டால் முதல்வர் தங்க சங்கிலியை எடுத்துக் கொள்ளலாம் என இருவரும் கூறினார்கள். தங்க சங்கிலியின் பெருமானத்திற்கு மோதிரத்தின் பெருமானம் வெகு குறைவாக இருந்ததால் சங்கிலியை எடுத்தவர் தனது மோதிரத்தை அவ்விருவர்களுக்கு கொடுத்து விட்டு சங்கிலியை தான் எடுத்துக் கொண்டார்.

இவ்வாறே மற்றொருவர் தெருவில் நடந்துக் கொண்டு போகும் போது ஒரு தங்க சங்கிலி கிடைக்கப்பெற்று தங்க சங்கிலிக்கு பதில் தனது காதில் அணிந்திருந்த இரு கம்மல்களையும் கொடுத்தார்.

மோதிரத்தையும், பிறகு இருகம்மல்களையும் பங்காக பெற்ற தியாக ராஜனும், ராமகிருஷ்ணனும் அவைகளை விற்க முயற்சிக்கும் போது பிடிபட்டனர். கீழே கிடைக்க பெற்ற சங்கிலிகள் உண்மையில் தங்க சங்கலிகள் இல்லை எனவும், அவைகளை தயார் செய்த காஷ் பில்லுடன் தெருவில் கிடைக்கும்படி போட்டது தியாகராஜனும் ராம கிருஷ்ணனும் தான் என்று சொல்ல வேண்டியது அவசியம் இல்லை.

ஆண்டவனுக்கு தக்குவாச் செய்

ஆண்டவனல் மூஸா (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட தௌராத் வேதத்தில் எழுதப் பட்டிருக்கிறதாவது :—

ஆதமுடைய மகனே! நான் உனக்கு உன் தாய்வயிற்றில் தரிக்கத் தலம் தந்தேன். நீ குவளரையில் திடுக்கிடாமல் உன் முகத்துக்கு மூடியிட்டேன். இன்னும் நீ செவ்வையாக சாய்ந்து கொள்ள உன் தாய் வயிற்றில் வலப்பாகம் ஒரு சார்மானமும் இடப்பாகம் ஒரு சார்மானமும் தந்தேன். உனக்கு உன் தாய் புசிக்கும் வஜீபனத்தின் வாடை வீசாமல் உன் முகத்தைத் தாயுடைய முதுகுபுறமாக்கினேன். இன்னும் நீ தாய் வயிற்றில் நிற்கவுமிருக்கவும் உனக்கு நான் படித்துத் தந்தேன். இப்படியெல்லாம் செய்ய என்னல்லாதவனுக்கு இயலுமா பார்! அப்பால் நீ அவதரிக்கும் காலம் நிரம்பின பொழுது. தாயுடைய குவளரையைக் கொண்டு சாட்டப்பட்ட மலக்களவில் உன்னை வெளிப்படுத்தும்படி வஹீஅறிவித்தேன். அவர் தம்முடைய இறகின்பேரில் உன்னை வெளியிறக்கிஞர். அப்பொழுது உனக்கு கடிக்கப் பல்லில்லை, பிடிக்கக் கையில்லை, நடக்கக் காலில்லை யென்று கோடையில் குளிராகவும் மாரியில் சூடாகவுமிருக்கும் பாலைக் கொடுக்கும் இரண்டு முலை நரம்பை உன் தாயுடைய நெஞ்சில் முளைப்பித்தேன். இன்னும் உன் தந்தை தாயுடைய மனதில் உன் பேரிலுள்ள உவப்பை ஸ்தாபித்தேன். உன் வயிறு நிரம்பினலொழிய அவர்கள் இரண்டு பேரும் வயிற்றை நிரப்பமாட்டார்கள்; நீ உறங்கினலொழிய அவர்கள் உறங்க மாட்டார்கள். இப்படியெல்லாமிருந்து அப்பால் உன் முதுகு பலத்து இடைவலுத்து நீ ஆளானபொழுது எனக்கு நீ தக்குவாச் செய்யாமல் மாறு செய்து என்னுடனே போருக்கு நிற்கிறுய். இன்னும் நானிருக்க என்னை நம்பாமல் நான் படைத்த கல்லை நம்புகிறுய். இன்னும் நீ பாவஞ் செய்யும் பொழுது மற்றவர்களுக்கு மறைக்கிறுய். தனித்த தலத்தில் என்னுடனே போருக்கு நிற்கிறுய். எனக்கு நீ வெட்கிக்கிறுயில்லை. இப்படியிருக்க நானே நீ கூப்பிட்டால் ஜவாபு கொடுக்கிறேன், கேட்டால் தருகிறேன். இன்னும் நீ தவ்பாச் செய்து பாப மன்னிப்புத்தேடி என்னளவில் மீண்டால் சேர்த்துக் கொள்கிறேன்.

மாதர் பகுதி.

தக்காளி ஜாம்

நல்ல பழுத்த தக்காளி பழம் 1 வீசை எடுத்து மேல் தோலும் உள் விதையும் நீக்கி, சட்டியில் போட்டு அத்துடன் ¾ வீசை சர்க்கரை, 2 பெரிய எலுமிச்சம் பழசார் இவை இரண்டையும் தக்காளிப் பழத்தோடு சேர்த்து, கலந்து அடுப்பிலேற்றி சிறுக தீ இடவும். தக்காளி அரை வேக்காட் ஆனபிறகு பூக்கி பவுடர் இரண்டு சிட்டிகை எடுத்து கொஞ்சம் ஜலத்தில் கரைத்து அடுப்பி லிருக்கும் தக்காளியோடு கலந்து கிளறி விடவும். இன்னும் சிறிது நேரம் அடுப்பிலே வைத்து கிளறி ஜீரா பதம் வந்ததும, முந்திரிப பருப்பு 2½ பலம் சாரைப் பருப்பு 2½ பலம் போட்டு கிளறி இறக்கி வைத்துக் கொள்ளவும். ஆறினதும் தக்காளி ஜாம் தயாராகிவிடும்

பாத்திமா நாயகிக்குப் போதனை.

ரிவாயத் :—ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பாத்திமா ரலியல்லாஹு அன்ஹாவைப் பார்த்து, "பாத்திமாவே! நீ முஹம்மதுடைய மகளா யிருக்கிறு யென்று மருண்டிடாதே. நான் அல்லாஹ்வில் நின்றும் ஒரு வஸ்துவையும் உனக்கு தேவை யறுக்க மாட்டேன். என்கிலும் நீ அமல்செய் அமல்செய் அமல்செய்" என்று மடக்கி மடக்கி மூன்று தடவை சொன்னார்கள். ஆகையால் வம்சம் புண்ணியம் கொடுக்கு மென்றிருந்தால் இந்த நாயகியைக் காண வேறே யார் மெத்த பாத்திபம? இவர்களுக்குக் கூட தக்வாவையும் அமலையும் விட உத்திரவில்லை.

பத்ஹுல் இஸ்லாம்

பத்திரிகைக்கு கட்டுரைகளும் கதைகளும் வரவேற்கப் படும். ஏற்றுக் கொள்ளப்படுபவைகளை அச்சிடப்படும். மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்

பத்ஹுல் இஸ்லாம்

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

விகடத் துண்டுகள்.

மாஜிஸ்டிரேட் (குற்றவாளியிடம்): நீ இந்த வீட்டில் ஒரே வாரத்தில் இரண்டுதடவை திருடினய். அது சரிதான? அது உண்மையா?

திருடன்: ஆமங்கோ வீடு கிடைக்காத பஞ்சம் ரொம்ப மோசங்கோ.

ஸைகில் ஓட்டிக்கொண்டு வந்தவன் தெருவில் நடந்து போன ஒருவன்மேல் வண்டியை ஏற்றிவிட்டான்.

ஸைகில் காரன்: என்னே மன்னிக்க வேண்டும் எல்லாம் என்னுடைய தவறுதல் தான்.

நடந்து போனவன்: இல்லே எல்லாம் என்னுடைய தவறுதல். உன்னே ஸைகில் ஓட்டிக்கொண்டுவர வெகுதூரத்திலேயே பார்த்தேன். நான் இந்த மரத்துமேலே ஏறிக்கொள்ள டயம் இருந்தது. அது செய்யாதது எனது தவறுதல்தான்.

வெளியூர் ஆசாமி (உள்ளூர் ஆசாமியிடம்): இங்கு நல்ல ஹோட்டல்கள் ஏதாவது இருக்கா?

உள்ளூர் ஆசாமி: இங்கு நல்ல ஹோட்டல்கள் இரண்டு இருக்கின்றன, ஒன்று அதோ அது; மற்றொன்று இந்த ஹோட்டல். ஆனல் நீங்கள் இந்த இரண்டு ஹோட்டலில் எதற்கு போனலும் ஏண்டா மற்றொன்றுக்கு போயிருக்கக்கூடாது என்று வருந்துவீர்கள்.

குமஸ்தா: எனக்கு சம்பளம் உயர்த்தி போடவேண்டும். என்னே தேடி மூன்று ஆசாமிகள் வருகிறார்கள்.

எஜமான்: எந்த மூன்று ஆசாமிகள் உன்னே தேடிவருகிறார்கள்?

குமஸ்தா: 'அரிசிகடை ஆசாமி, மஸலாகடை ஆசாமி, விறகு கடை ஆசாமி.

மனேவி (புருஷனிடம்) :நான் சொல்லுகிறது தெரிகிறதா? நான் இனிமேல் இங்கு ஒருக்ஷணமும் இருக்கமாட்டேன், போறேன். என் சாமான்களெல்லாம எடுத்துகொண்டு மாடியில் எங்கம்மா அறைக்கு போகப் போகிறேன்,

---

ஸர்கஸ் சொந்தக்காரரிடம் வேலைகேட்ட ஒருவருக்கு சிங்கத்தை ஸர்க்கஸுக்காக பழக்கும் வேலை யிருப்பதாக சொல்லப்பட்டது.

ஸர்கஸ் சொந்தகாரர்: அது சுலபமான வேலை. அதில் இருக்கும் நுட்பம் என்னவென்றால் நீ சிங்கத்திற்கு பயப்படவில்லை என்பதாக சிங்கத்தை நினைக்கச் செய்வதுதான்.

வேலை கேட்டவர்: நான் அவ்வளவு மோசக்காரனல்ல.

"கலியாணம் பண்ணிய வாழ்க்கை எப்படி"

"நான் ஒரு அழகான பெண்ணை கலியாணம் செய்தேன். அவள் முகம் சந்திரன் போல் கண் கயல்மீன்போல் இடுப்பு கொடிபோல்"

"அப்போ கலியாணம் செய்ததால் நீ வருத்தப்படலே"

"ஆனால் நான் ஹோட்டலிலே சாப்பிட்டு சாப்பிட்டு அலுத்துப் போச்சு"

ஸினிமாவிலிருந்து ஒருவன் ஓடிப்போய் மானேஜரிடம்,

"என்னங்கோ ஸினிமாவிலே கரடியைக்கூட விடுகிறீர்களா? நான் ஏன் அதன் பக்கத்தில் உட்காரவேண்டி இருக்கு? "என்றான்.

மானேஜர்: நீங்கள் ஏதோ தவறுதலாக சொல்லுகிறீர்கள்.

"நானா, தவறுதலாக சொல்கிறேன். சரி வந்து பாருங்கோ"

மானேஜர் தனது அறையிலிருந்து எழுந்து ஸினிமா காட்சி கூடத்தில் உள்ளே சென்று பார்த்தார். உண்மையில் அங்கு ஒரு கரடி உட்கார்ந்து படத்தை பார்த்துக் கொண்டிருந்தது. கரடிக்கு அடுத்து உட்கார்ந் திருப்பவரிடம்,

மானேஜர்: இது உங்க கரடிதானா?

"ஏன்? ஆமாம்"

மானேஜர்: என்னை மன்னிக்கணும், இந்த கரடி இங்கு என்ன செய்கிறது?

"அது இந்த கதை புஸ்தகத்தை ருசிகரமாக உட்கொண்டது. நான் அதற்கு இந்த கதையை ஸினிமாவில் பார்க்கவிரும்பும் என்று இங்கு கொண்டு வந்தேன்"

187016

Edited by M. S. Abdul Khudus.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.